# இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு

## 1833-1990 வரை காலவரிசைப்படுத்தப்பட்ட சிறு குறிப்புக்கள்

சீ.அ. யோதிலிங்கம்

விழுது
ஆற்றல் மேம்பாட்டு மையம்

# அறிமுகம்

இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனில் பொது மக்களின் பங்களிப்பு அவசியம் என்று வாதிடுவோர் நிறைய உள்ளனர். இந்தக் கருத்து பின்வரும் இரண்டு அடிப்படையான காரணிகளை மனதில் வைத்துக் கொண்டே கூறப்படுகின்றது:

1) இனப்பிரச்சினை போன்ற அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு முக்கியமாக அரசியல் வாதிகளினதும், விடுதலைப் போராட்ட அணி மற்றும் ஆயுதக்குழுக்கள் ஆகியவற்றின் தலைமைத்துவங்களினதும் கைகளிலேயே இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தத் தலைவர்களை உருவாக்குவது எமது மக்கள் சமூகமேயாகும். முதிர்ச்சியும் தீர்க்கதரிசனமும் உள்ள மக்கள் சமூகத்திலிருந்து முதிர்ச்சியும் தீர்க்கதரிசனமும் மிக்க தலைவர்கள் உருவாக்கப்படுவர். எனவே, மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும்கூட, ஒரு விளக்கம் உள்ள மக்கள் சமூகம் இல்லாது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது நிச்சயம்.

   விளக்கம் உள்ள மக்கள் சமூகம் இருக்குமாயின், தலைவர்கள் தமது நடவடிக்கைகளுக்கு எப்படியும் பதில் சொல்லியே தீரும் வகையில் அது ஒரு அழுத்தக் குழுவாகவும் தொழிற்படலாம். அவர்களை சரியான பாதையில் போகும்படி தங்கள் வாக்களிப்பு முறைகளினாலும் அபிப்பிராயத் தெரிவிப்புக்களினாலும் செய்யலாம்.

2) எந்த வகையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டாலும் அத்தீர்வுகள் செயற்படுத்தப்பட வேண்டும். கையெழுத்திட்டால் மட்டும் போதாது. அதனை அன்றாட நடைமுறைகளில் செயற்படுத்தும் பொறுப்பு அரச அதிகாரிகள், நீதித்துறை வல்லுனர்கள், காவல் துறை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் போன்ற பலருடைய கைகளிலும் இருக்கின்றது. எனவே பொதுமக்கள் தயாராக இருந்தாலன்றி எந்தத் தீர்வினையும் செயற்படுத்த முடியாது.

ஆகவே, இந்த வகைகளில் பொது மக்கள் பங்களிக்க வேண்டுமென்றால் இனப்பிரச்சினையைப் பற்றிய விளக்கம் அந்த மக்களுக்குத் தேவையல்லவா? ஆனால் நாம் மக்களைச் சந்திக்கும்போது எதிர்கொள்ளும் நிலைமை என்ன? வடக்கென்றாலும் சரி தெற்கென்றாலும் சரி, எங்கும் பொதுவாகவே அவர்களுக்கு எப்படி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தோன்றியது என்பது முற்றிலும் தெரியாத நிலைமைதான் உள்ளது. ஏதோ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் யுத்தத்தை ஆரம்பித்தார் என்று நம்புகின்றனர்.

இப்படியாகத்தான் பொது மக்களின் விளக்கம் இருக்குமாயின், அவர்கள் எப்படி ஒரு முதிர்ந்த, நீதியான அரசியலை முன்னெடுப்பது அல்லது ஆதரிப்பது? இக்காரணங்களினால்தான் தென் பகுதியில் பலரும் சிங்கள அரசியல் கட்சிகளின் உண்மைக்கு ஒவ்வாத சந்தர்ப்பவாதப் பிரச்சாரங்களை நம்புகின்றனர். வட-கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையோர் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு அப்பால் அதன் தாற்பரியங்களை உணர்ந்து கொள்ள முடியாமல் குழப்பத்தில் இருக்கின்றனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்

டிய முன்னெப்போதும் இல்லாத-தேவை இந்தக் காலகட்டத்தில் எழுந்துள்ளது.

இந்த முக்கியமான தேவையை உணர்ந்துதான் எமது அமைப்பு இந்தச் சிறிய நூலை வெளிக்கொணரு கின்றது. இதிலுள்ள விடயங்கள் முன்பு வெளிவந்த வரலாறுகள்தாம். ஆனால் அவையெல்லாம் சாதாரண மக்கள் எல்லோரும் இலகுவில் வாசிக்கக் கூடிய முறையில் வெளியிடப்படவில்லை. இந்த நூலில் நாம் சிறு குறிப்புக்களின் உதவியுடன் ஒரு நூற்றாண்டின் சரித்திரத்தை உங்களுக்குக் கொண்டு வர முயற்சித்திருக்கின்றோம். நடந்த எல்லாவற்றை யும் உங்கள் முன் கொண்டுவரமுடியாவிடினும், இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்கான முக்கிய நிகழ்வு கள் என்று நாம் கருதும் விடயங்களைத் தந்திருக் கின்றோம். ஆயிரக்கணக்கான மக்கள் இதனை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதனாலேயே இந்த சுருக்க முறையிலான வரலாற்று ஆவணப் பதிவு வெளியிடப்படுகிறது.

இதை நீங்கள் வாசித்துப் பயன்பெறுவதுடன் உங் கள் நண்பர்கள், உறவினர்கள், சக பணியாளர்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டுகின் றோம். இதிலுள்ள முக்கியமான வரலாற்று நிகழ்வு களை மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ள நீங்கள் விரும்பினால், உங்களைப் போன்று விரும்பும் ஏனைய சிலருடன் இணைந்து நீங்கள் வாசகர் வட்டங்களை அமைத்துக் கொள்வதும் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

எமது விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நாடுதழுவிய வாசகர் வட்டங்களை உருவாக்கி வருகிறது.

வாசகர் வட்டமொன்றானது, 5-12 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சிறு குழுவாகும். இதைச் சேர்ந்தவர்கள் வாராந்தம் கிரமமாகச் சந்தித்து தமக்கு ஆர்வமான விடயங்களை வாசித்து அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவார்கள். பொது மக்கள் தங்கள் அறிவை விரிவாக்கவும் ஆழப் படுத்தவும் இந்த நடவடிக்கை மிகவும் பிரயோசன மானதாகும். அது மட்டுமல்ல, ஒரு சுவாரசியமான நடவடிக்கையும் கூட. ஒரு நூலை தனித்து வாசிப்பதிலும் விட மற்றவர்களுடன் கூடி வாசித்து அதைப் பற்றி விவாதிப்பது மிகச் சுவார்சியமானதும் அர்த்தமுடையதுமானதாகும். மேலும், அடிக்கடி நண்பர்களைச் சந்திப்பதற்கான ஒரு நல்ல சந்தர்ப் பத்தையும் இது ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இந்த வலையமைப்பும் அதன் மூலமாக வருகின்ற நட்புக்களும் உங்கள் சொந்த வாழ்க்கையிலும் பல எதிர்பாராத உதவிகளைக் கொண்டு வரலாம்.

எங்களுடைய நாட்டில் நீதிக்காகவும், சமாதானத்திற் காகவும், அபிவிருத்திக்காகவும் நீங்கள் ஒவ்வொரு வரும் பங்களிப்பினை வழங்க வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகிறேன்.

**சாந்தி சச்சிதானந்தம்**
தவிசாளர்
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்

## 1833 - 1921

# பிரித்தானியாவிற்குக் கீழான ஆட்சியில், இலங்கையரும் பங்கு பெறுவதற்கான அரசியலமைப்புத் திட்டங்கள் தீட்டப்பட்ட காலம்

### 1833 - கோல்புறூக் அரசியல் சீர்த்திருத்தம்

இச் சீர்த்திருத்தமானது. காலனித்துவ அரசியல். நிர்வாக வலைப் பின்னலுக்குள் இலங்கையையும் இணைக்கும் முயற்சியாகும். இலங்கையின் பன்முக சமூகத் தன்மை, அதன் அடையாளம் என்பவற்றை இது கவனத்தில் எடுக்கவில்லை. சமூகங்களின் விருப்பங்களைக் கேளாமல் ஒற்றை அதிகார கட்டமைப்பின் கீழ் அனைத்து சமூகங்களையும் கொண்டு வருகின்றது. எனினும் சட்ட சபைக்கான பிரதிநிதித்துவ முறையில் சமூகங்களின் ஜனநாயகத்தை பேணும் வகையில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையினை அமுல்படுத்துகின்றது.

பிரதிநிதித்துவ முறையில் ஆரம்பகாலங்களில் முஸ்லிம்களையும் தமிழர்களே பிரதிநிதித்துவப்படுத்தினர். அக்காலத்தில் முஸ்லிம் மக்கள், கரையோரச் சோனகர்கள், இலங்கைச் சோனகர்கள், மலேயர்கள் என பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர். இவர்களுள் கொழும்பு கண்டி போன்ற நகரங்களை நிலை கொண்டு செல்வாக்குள்ளவர்களாக இருந்தவர்கள் மலேயர்கள் ஆவார்கள். மலேயர்களின் தலைவர்கள் முஸ்லிம் மக்களின் குரலாக ஒலித்தனர். அந்தப் பின்னணியில் அவர்கள்

முஸ்லிம்கள் தமிழ்மக்கள் அல்ல என்னும் வாதத்தை முன்வைத்தனர். இதன் பயனாக 1889ம் ஆண்டு சுதேசிகளின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போது முஸ்லிம்களுக்கும் அவர்களுடன் சேர்த்து கண்டியச் சிங்களவர்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. சுதேசிகள் அரசியல் சக்திகளாக உருவாகின்ற போக்கு ஆரம்பிக்கின்றது.

## 1800கள் - பெருந்தோட்டத்துறை அறிமுகம்

இந்தியத் தொழிலாளர் வருகை, இந்திய - முஸ்லிம் வியாபாரிகள் வருகை, மலையாளத் தொழிலாளிகள் வருகை. கொழும்பு தலைநகரமாக்கப்பட்டதால் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் கொழும்பு நிர்வாகத்துடன் இணைக்கப்படுகின்றது.

## 1800களின் கடைசிப் பகுதிகள் - சிங்கள பௌத்த தேசியவாத உருவாக்கம்

காலனித்துவவாதிகளுக்கு எதிராக எழுந்த போராட்டம் கிறிஸ்தவர்களுக்கெதிரான போராட்டமாக உருவெடுக்கின்றது. இது தனியே கலாச்சாரச் சீரழிவு, பௌத்த மதத்தின் மறுமலர்ச்சி, மது பாவனைக்கெதிரான எழுச்சி போன்றவற்றையே அடங்கியதாக இருந்தது. அநகாரிக தர்மபாலவின் வருகையும் இயக்கமும் இந்தக் கால கட்டத்தில் நிகழ்கின்றது.

முஸ்லிம் வியாபாரிகளுடனான வியாபாரப் போட்டிகள் முஸ்லிம் இனத்திற்கெதிரான உணர்வாக சிங்கள மக்களிடையே உருவெடுத்தது. லக்மின, தினமின, சிங்கள ஜாதிய, சிங்கள பௌத்தய போன்ற பத்திரிகைகள் முஸ்லிம் இனத்தவர்களுக்கும் மலையாள இனத்தவர்களுக்கும் எதிரான கீழ்த்தரமான வாசகங்களைப் பிரசுரிக்கின்றன.

மொத்தத்தில், பௌத்த சிங்கள தேசியவாதம் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கெதிரான போராட்டமாக இல்லாது நாட்டிலுள்ள ஏனைய இனங்களுக்கு எதிரான கிளர்ச்சிகளாக உருவம் எடுக்கின்றது.

## 1915- சிங்கள முஸ்லிம் கலவரம்

350 முஸ்லிம் கடைகள் எரிக்கப்படுகின்றன. 4075 முஸ்லிம் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. 189 பேர் காயமுற, 25 முஸ்லிம்கள் இறக்கின்றனர். 103 பள்ளிவாசல் கள் அழிக்கப்படுகின்றன. தமிழர் சிங்கள ஆதரவு நிலைப்பாட்டினை எடுத்தனர். இதே வேளை, கலவரங் களைத் தூண்டிய காரணத்திற்காக சிறைப்படுத்தப்பட்ட சிங்களத் தலைவர்களை விடுதலை செய்விக்கும் கோரிக் கையுடன் சேர் பொன் இராமநாதன் இலண்டன் பயண மாகின்றார். விடுவித்துக் கொண்டு திரும்பி வந்தபோது சிங்களத் தலைவர்களால் வெகுவாக கௌரவிக்கப் படுகின்றார். இது முஸ்லிம் மக்களுக்கு அதிருப்தியை விளைவிக்கின்றது.

## 1919 - இலங்கைத் தேசிய காங்கிரஸ் உரு வாக்கம்

1915 கலவரத்தின் தாக்கத்தினால், சகல இன மக் களும் ஒரு தேசிய இயக்கத்தினை வேண்டி நிற்கின்றனர். இதற்காக இலங்கை அரசியல் சீர்த்திருத்தக் கழகம் என்ற அமைப்பு சேர் பொன் அருணாசலம் தலைமை யில் 1917ம் ஆண்டு உருவாக்கப்பட்டு நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. பல அமைப்புக்களுடன் உடன்பாடு பெறப்பட்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்படுகின்றது. முதல் தலைவராக சேர் பொன் அருணாசலம் எல்லோரினாலும் தெரிவு செய்யப்படு கின்றார். இந்த அமைப்பு சுயாட்சியையும், பிரதிநிதித்துவ முறையில் பெரும்பான்மை எண்ணிக்கை ஜனநாயகத் தினையும் கோரிக்கைகளாக முன்வைத்தது.

## 1921 முஸ்லிம்கள் தம்மை தனியான இனமாக பிரகடனம் செய்தல்

முஸ்லிம்கள் சமூக அரசியல் தளங்களில் தாமும் ஒரு சக்தியாக உருவாக முனைகின்றனர். தமிழ் தலைவர்கள் அவர்களின் வரலாற்றை அசட்டை செய்து அவர்கள் செய்யும் தொழிலையும் இழிவாக நோக்கியதும் இதற்கு ஒரு காரணமாயிற்று. தம்மைத் தமிழர் என்கின்ற இனத்துக்குள் அடக்க வேண்டாமென்றும், இலங்கை முஸ்லிம்கள் - இந்திய முஸ்லிம்கள் என்ற பதப்பிரயோகங்களைத் தவிர்த்து அனைவரையும் இலங்கை முஸ்லிம்கள் என அழைக்குமாறும் முஸ்லிம் தலைவர்கள் கோருகின்றனர்.

## 1921 - மானிங் அரசியல் சீர்த்திருத்தம்

இதுவரை படித்த பிரஜைகள்தான் வாக்களிக்கலாம் என்னும் விதிமுறை நடைமுறையிலிருந்தது. இதன் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சனத்தொகையும் வாக்காளர்கள் எண்ணிக்கையும் பின்வருமாறு இருந்தது:

| மொத்த சனத்தொகை | இடம் | வாக்காளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 717,739 (இதில் சிங்களவர் 316,142) | மத்திய மாகாணம் | 2427 |
| 244,163 (இதில் சிங்களவர் 110,470) | கொழும்பு | 4325 |
| 374,829 (இதில் தமிழர் 352,322) | வட மாகாணம் | 13,937 |
| 192,823 | கிழக்கு மாகாணம் | 806 |

'படித்தவர்களுக்கு வாக்கு' என்கின்ற அடிப்படையில் தமிழர்களுக்கு மிக அதிகமான வாக்குகள் இருந்ததால் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துமாறு சிங்களத் தலைவர்கள் கோரினர்.

இதன் பயனாக இனச் சமூகங்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயம் நிராகரிக்கப்பட்டு பெரும்பான்மை எண்ணிக்கை ஜனநாயகம் முதன்மைப் படுத்தப்படும் வகையில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. ஆயினும் இந்திய வம்சா வழியினருக்குத் விசேடமாக பிரதிநிதித்துவம் வழங்கப் படுகின்றது. நிர்வாகக் குழுவில் மட்டும் சுதேசிகளுக்கு இன அடிப்படையில் இடம் வழங்கப்படுகின்றது.

நாட்டின் அரசியல் கட்டமைப்பின் பிரதான சபைகளில் இனச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் நிராகரிக் கப்பட்டமையால் தமிழர்கள் தனியான இன அரசியலை நோக்கி நகர ஆரம்பிக்கின்றனர். இதுவரை காலமும் தமிழர் என்கின்ற அடையாளத்தைப் பண்பாட்டுத் தளத்திலும் இலங்கையர் என்கின்ற அடையாளத்தை அரசியல் தளத்திலும் பேணியவர்கள். அதைக் கைவிட்டு, இரண்டு தளங்களிலும் தமிழர்கள் என்ற அடையாளத்தை முன்னிறுத்துகின்றனர். இலங்கையில் சிங்களவர்கள்தாம் பெரும்பான்மையினர் என்னும் உண்மையை ஏற்றுக் கொண்டு சிங்கள மக்களுக்குரிய சலுகைகளுக்கான பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய தமிழர் முன்வர வேண்டும் என்று சிங்களத் தலைமைத்துவம் எதிர்பார்க் கின்றது.

தமிழர் சேர். பொன் அருணாசலம் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறி தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பினை 1921 ஆகஸ்டில் உருவாக்குகின்றனர்.

# 1921-1949

# தமிழ் மக்களின் அரசியல் தனித்துவமாக உருவாகிய காலம்

## 1922 - ஏ.ஈ.குணசிங்கவின் தொழிற்சங்க அரசியல்

சேர் பொன் அருணாசலத்தின் அடி தொட்டு தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் குணசிங்க. இவருடைய தொழிற்சங்கத்தில் உபதலைவராக இருந்தவர் இந்தியத் தோட்டத் தொழிலாளிகளின் பிரதிநிதியான நடேசையர்.

ஆனால் காலஞ்செல்லச் செல்ல குணசிங்க அநகாரிக தர்மபாலாவின் இனவாதத்தைத் தழுவிக்கொள்கின்றார். முதலில் முஸ்லிம்களுக்கெதிராக இனவாதத்தைக் கக்கிய இவர், பின்பு மலையாளித் தொழிலாளிகளுக்கெதிராகத் திரும்புகின்றார். நடேசையர் கருத்து வேற்றுமையினால் வெளியேறுகின்றார். தொழிலாளர் இயக்கம் இனரீதியாகப் பிளவுபடுகின்றது.

## 1924 - யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் தோற்றம்

இதன் தோற்றத்துடன் தமிழ் அரசியலில் இரு அணிகள் உருவாகின்றன. யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஐக்கிய இலங்கையைக் குறித்து முழு நாடும் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றது. இந்த முறையில் அது இந்தியத் தேசிய காங்கிரஸைப் பின்பற்று

கின்றது. தமிழர் மகாஜன சபையோ தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பற்றிப் பேசுகின்றது. இது இந்திய வம்சாவழியினர், ஐரோப்பியர், பறங்கியர் ஆகியோருடன் இணைந்து சிறுபான்மையினராகத் தம்மை விவரித்து இனச் சமூகங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஜன நாயகக் கோரிக்கைகளை முன்வைக்கின்றது.

இதனால் மானிங் - டிவன்சயர் சீர்த்திருத்தம் ஆங்கி லேய ஆட்சியினால் கொண்டு வரப்படுகின்றது. இதன் முக்கிய அம்சங்களாவன, மேல் மாகாணத் தமிழர்களுக்கு தனியான பிர்திநிதித்துவம் வழங்கப்படுதல், நிதிக்குழுவில் சுதேசிகளுக்கு இடம் வழங்குதல், பிரதேசவாரிப் பிரதி நிதித்துவம் விஸ்தரிக்கப்படுதல் என்பனவாகும்.

இச்சீர்திருத்தத்தின் விளைவாக சிறுபான்மையோரின் ஐக்கிய முன்னணி சிதைவடைகின்றது. கரையோரச் சிங்களவர்களின் பொருளாதார ஆதிக்கத்தினால் கண்டிச் சிங்களவர்களும் தனியான அரசியலை நோக்கி நகரு கின்றனர்.

## 1925 - கண்டித் தேசிய மாநாடு

கண்டிச் சிங்களவர் முதன்முதலாக சமஷ்டி ஆட்சி தங்களுக்கு வேண்டும் என்கின்ற கோரிக்கையினை முன்வைக்கின்றனர். S.W.R.D பண்டாரநாயக்கா இக் கோரிக்கையினை ஆதரித்து கண்டி, கரையோரம், வட - கிழக்கு என இலங்கை மூன்று பிரதேச சமஷ்டி அரசு களாகப் பிரிக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றார்.

அவர் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸின் உதவியுடன் யாழ்ப்பாணத்திலும் சமஷ்டி ஆட்சிக்கான பிரசாரத்தை முன்னெடுக்க முயற்சிக்கின்றார். தமிழ்த் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையினை நிராகரித்து ஒற்றையாட்சி அமைப்பிற்குள் இனச் சமூகங்கள் பிரதிநிதித்துவப்

படுத்தப்பட்டு அவற்றுக்கு சகல துறைகளிலும் சம வாய்ப்புக்கள் தரப்படவேண்டும் என்கின்ற கோரிக்கை யினைத் தொடர்ந்தும் முன்வைக்கின்றனர்.

யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் பூரண சுயாட்சி வேண்டும் என்ற பிரச்சாரத்தோடு சாதி ஒழிப்பு நட வடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது. மகாத்மா காந்தி யாழ்ப் பாணம் உட்பட இலங்கையின் பல பகுதிகளுக்கு வருகை தந்து மக்களைச் சந்திக்கின்றார்.

## 1931 - டொனமூர் அரசியல் திட்டம்

டொனமூர் பிரபுவிடம் கரையோரச் சிங்களவர் உள்ளூர் சுயாட்சியையும், கண்டிச் சிங்களவர்கள் சமஷ்டிக் கோரிக்கையையும், தமிழர்கள் ஒற்றையாட்சிக்குள் இனச் சமூகப் பிரதிநிதித்துவக் கோரிக்கையையும் முன்வைக் கின்றனர். இந்த அரசியல் திட்டத்தின் கீழ் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. பிரதேசவாரிப் பிரதிநிதித் துவக் கட்டமைப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இதன்கீழ் எண்ணிக்கையில் குறைந்த இனங்கள் பாதிக்கப்படலாம் என்பதற்காக இனங்களைப் பாதுகாக்கும் வகையில் மறுப்பாணை அதிகாரம் தேசாதிபதியிடம் கொடுக்கப் பட்டது. ஆனால் இலங்கையருக்கு சுயாட்சி அரைவாசி தான் கொடுக்கப்பட்டது.

இனச் சமூகங்கள் பிரதிநிதித்துவம் பின்பற்றப்பட வில்லை என்பதற்காக தமிழர் மகாஜன சபை டொனமூர் சீர்திருத்தத்தினை எதிர்க்கின்றது. யாழ்ப்பாண வாலிப காங்கிரஸோ பூரண சுயாட்சி வழங்கப்படவில்லை என்பதற்காக எதிர்த்தது. டொனமூர் திட்டத்தின் கீழ் நடை பெற்ற முதலாவது பொதுத் தேர்தலை யாழ் குடா நாடு பகிஷ்கரிக்கின்றது. தென் இலங்கைத் தலைவர்கள் முதலில் பகிஷ்கரிப்பதாக கூறி பின்னர் அதனைக் கைவிட்டு தேர்தலில் பங்கெடுக்கின்றார்கள்.

டொனமூர் சீர்திருத்தத்தின் விளைவாக பேரின வாதச் செயற்பாடுகள் அரச அதிகாரக் கட்டமைப் பினூடாக முன்னெடுக்கப்பட ஆரம்பித்தன. குறிப்பாக இந்திய வம்சாவழியினருக்கு எதிரான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. உதாரணமாக, நெற்காணிச் சட்டம், மீன்பிடிச் சட்டம், போக்குவரத்து அனுமதிச் சட்டம் போன்றவற்றைக் காட்டலாம். இச்சட்டங்கள் இந்திய வம்சாவழி மக்களுக்கு நெற்காணிகள் சொந்தம் கொள் வதையும், மீன்பிடி அனுமதிப் பத்திரத்தையும், பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கான அனு மதியையும் நிராகரிக்கின்றன. இலகுவில் இத்தொழி லாளர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடிய வேலை நீக்கச் சட்டமும் கொண்டுவரப்படுகின்றது.

பேரினவாத அரசியல், அரச கட்டமைப்பினூடு முன்னெடுக்கப்பட்டதால் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் முன்வைத்த தேசிய ஒன்றிணைப்பு அரசியல் பின்னுக்கு தள்ளப்பட்டு தமிழ் இனத்தை பிரதானப்படுத்திய அரசி யல் முன்னேறுகின்றது. இதனால் 1934ம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இன அரசி யலை முன்னெடுத்த தலைவர்கள் வெற்றியடைகின்றனர். ஜீ.ஜீ பொன்னம்பலம் அரசியலில் பிரவேசிக்கின்றார்.

1936ம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரி சபையும் அமைக்கப்படுகின்றது. இதைக் கண்ட தமிழ் மக்கள் நடைமுறையில் இருக்கும் அதிகாரக் கட்டமைப்பில் நம்பிக்கை இழக்கின்றனர்.

## 1939 - இலங்கை இந்திய காங்கிரஸ் தோற்றம்

திடீரென அரசாங்கம் இந்திய வம்சாவழித் தொழி லாளர் தலைவர்களை வேலையிலிருந்து நீக்கியது.

இதைக் கேள்விப்பட்ட மகாத்மா காந்தி இலங்கையின் ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஜவஹர்லால் நேருவை அனுப்புகின்றார். நேரு பேச்சு வார்த்தை நடத்தியும்கூட ஆட்சியாளர்கள் வேலை நீக்கத்தினை வாபஸ் வாங்க மறுக்கின்றனர்.

இதனால் நேரு இந்திய வம்சாவழியினருக்கென தனியான அமைப்பினை உருவாக்குமாறு ஆலோசனை வழங்குகிறார். நேருவின் ஆலோசனையின் பேரில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. தொண்டமான் 1944 இல் இலங்கை இந்திய• காங்கிரஸின் தலைவராகின்றார். 1950களில் இந்த அமைப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

## 1944 - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி தோற்றம்

இனச் சமூகங்களின் பிரதிநிதித்துவ ஜனநாயக முறையை வலியுறுத்தும் வகையில் 50:50 கோரிக்கை யினை முன்வைத்து ஜீ.ஜீ பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (அ.இ.த.கா) உருவாகின்றது.

## 1947 - சோல்பரி அரசியல் திட்டம்

சோல்பரி பிரபுவுக்கு ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அ.இ.த.கா 50:50 கோரிக்கை அடங்கிய திட்டத்தினை முன்வைத்தது. கண்டியச் சிங்களவர் சமஷ்டிக் கோரிக்கையினை முன் வைத்தனர். கரையோரச் சிங்களவர் ஒற்றையாட்சி அடிப் படையிலான உள்ளூர் சுயாட்சியுடன் கூடிய மந்திரி சபை மசோதாவை முன்வைத்தனர்.

கடைசியில் சோல்பரி அரசியல் சீர்திருத்தம் இனங்களுக்கு மத்தியிலான அதிகாரப் பங்கீடு இல்லாத ஒற்றையாட்சி அரசியல் யாப்பைக் கொண்டு வருகின்றது. ஆனால் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாது காப்பதற்கான ஏற்பாடாக 29 ஆவது பிரிவு இந்த யாப்பில் உள்ளடக்கப்படுகின்றது. இந்தப் பிரிவுச் சட்டத்தின்படி, சிறுபான்மையினர் நலன்களுக்கு எதிராக ஏதேனும் சட்டம் கொண்டு வரப்படுமாயின் அதனைத் தடுக்கும் அதிகாரம் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

அ.இ.த.கா கடுமையாக யாப்பினை எதிர்க்கின்றது. பெரும்பான்மைவாத ஜனநாயகத்தின் அடிப்படையில் உருவாகும் அரசு தமிழ் மக்களின் நலன்களைப் பேண உதவமாட்டாது என வலியுறுத்துகின்றது. ஜீ.ஜீ பொன்னம்பலம் தனது எதிர்ப்பினைத் தெரிவிக்க லண்டன் பயணமாகின்றார். டி.எஸ். சேனநாயக்கா சில தமிழர்களின் ஆதரவுடன் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று யாப்பினை அரசாங்க சபையில் நிறைவேற்றுகின்றார். 1947 தேர்தல்களில் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் சோல்பரி சீர்திருத்தத்திற்கு எதிராக தமிழர்கள் வாக்களிக் கின்றனர். தேர்தல் முடிந்தவுடன் ஒற்றையாட்சியில் சமூகங்களின் ஜனநாயகம் பேணப்படவில்லையாயின் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சியை தாம் கோரப் போவதாக அ.இ.த.கா அங்கத்தவர்களில் ஒருவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கூறுகின்றார்.

## 1948 - இலங்கை சுதந்திரமடைதல்

தமிழ் மக்களுக்கான சமூக ஜனநாயகம் பேணப் படாததினால் சுதந்திரக் கோரிக்கையினை அ.இ.த.கா நிராகரித்தது. டி.எஸ். சேனநாயக்கா சில தமிழரை அமைச்சர்களாக்கி அவர்கள் ஆதரவுடன் சுதந்திரக் கோரிக்கையினை வென்றெடுத்தார். சுதந்திர தினத்தில் ஏற்றப்பட்ட சிங்கக் கொடியையும் அது பௌத்த சிங்கள

மக்களது சின்னம் மட்டுமே என்ற காரணத்தினால் அ.இ.த.கா நிராகரிக்கின்றது. செல்வநாயகம் சங்கிலியனின் நந்திக் கொடியினைத் தனது வாகனத்தில் ஏற்றுகின்றார். இந்தத் தேசியக்கொடி விவகாரம் 1950கள் முழுவதும் தமிழ் மக்களின் போராட்டங்கள் பலவற்றுக்கான காரண மாகின்றது. சிங்களத் தலைவர்களோ, இந்தியாவின் தேசியக்கொடியில் ஒரு பௌத்த அரசனின் சின்னமான அசோக சக்கரம் மட்டும் பொறிக்கப்படலாம் என்றால், ஏன் இலங்கைக் கொடியில் சிங்கம் இருக்கக்கூடாது என்று வாதாடுகின்றனர்.

1948 யூலையில் எதிர்க்கட்சியில் இருந்த ஜீ.ஜீ பொன்னம்பலம் கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகி அரசாங்கத்தில் சேருகின்றார். இவரது காலத்தில்தான் பரந்தன் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலை, காகித ஆலை ஆகியன தாபிக்கப்படு கின்றன. அதற்குப் பின்பு இன்றுவரை வட-கிழக்கில் எந்தவிதத் தொழிற்றுறையும் அபிவிருத்தி செய்யப்பட வில்லை.

## 1948 டிசம்பர் 10 - பிரஜாவுரிமைச் சட்டம்

1948க்கு முன்னர் இலங்கை இந்தியா போன்ற சகல நாடுகளிலும் வசித்த மக்கள் பிரித்தானியப் பிரஜைகளா வர். எனவே சுதந்திரம் பெற்ற போது இலங்கை அரசாங் கம் தனது பிரஜாவுரிமைக்கான வரைவிலக்கணத்தை கொடுக்க வேண்டியிருந்தது. மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் தமிழ் நாட்டுடனான தங்கள் தொடர்புகளைப் பேணி வந்ததாலும், அங்கு அடிக்கடி சென்று வந்தததா லும், இந்தியா அவர்கள் எல்லோரையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்ததாலும், இந்திய வழ்சாவழியினரின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் வகையில் பிராஜாவுரிமைச் சட்டத்தினை சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங் கம் கொண்டு வருகின்றது. இந்தத் தொழிலாளர்கள்

மத்தியில் இடதுசாரி அரசியல் வேரூன்றியதும், அவ் வாறான கொள்கையுடைய இந்தியத் தமிழ்த் தலைவர்கள் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இச்சட்டம் கொண்டு வருதற்கான வேறு காரணங்களாகும்.

ஜீ.ஜீ பொன்னம்பலமும், எஸ்.ஜே. வி செல்வநாயக மும் மட்டுமே இதற்கு எதிர்த்து வாக்களிக்கின்றனர். சுயேச்சை தமிழ் உறுப்பினர்கள் சிலர் இச்சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றனர்.

பின்பு இச்சட்டத்துக்கு நிவர்த்தியாக இந்திய பாகிஸ் தானிய பிரஜாவுரிமைச் சட்டம் உடனடியாகக் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 1949ம் ஆண்டு ஓரளவிற்கு பிரஜாவுரிமை வழங்கும் ஏற்பாடு கொண்டு வரப்பட்டது. இதன்படி, இலங்கைப் பிரஜா உரிமை கோரும் இந்திய வம்சாவழியினர் திருமணமாகியவர்கள் எனில் 7 வருடங் கள் இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். திருமணமாகாதவர்கள் எனில் 10 வருடங்கள் இந்நாட்டில் தொடர்ச்சியாக வாழ்ந்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். இதன் கீழ் போடப்பட்ட நடைமுறை ஏற்பாடுகள் சாதாரணமாக எவரும் பிரஜா வுரிமையை பெறமுடியாத அளவிற்கு கடுமையாக இருந் தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) இதற்கான எதிர்ப்பு போராட்டத்தினை நடத்தி பிரஜாவு ரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டாம் என மக்களுக்குக் கூறுகின்றது.

பாராளுமன்றத்தில் இச்சட்ட மூலம் வாக்களிப்பிற்கு விடப்பட்டபோது ஜீ.ஜீ பொன்னம்பலம் உட்பட அ.இ.த.கா ஆதரவாக வாக்களிக்க செல்வநாயகம் உட்பட மூவர் எதிர்த்து வாக்களித்தனர். சட்டம் அங்கீகரிக் கப்படுகின்றது. இதன்பின்னர் தேர்தல் திருத்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டது இவையெல்லாவற்றின் ஊடாகவும் மலையக மக்களின் வாக்குரிமை முழுமையாகப் பறிக்கப் படுகின்றது.

# 1949 - 1968

# தமிழர் மத்தியில் பிரிவினைவாத அரசியல் வளர்ச்சி பெற்ற காலகட்டம்

## 1949 - தமிழரசுக்கட்சி தோற்றம் பெறல்

செல்வநாயகம் தலைமையில் அ.இ.த்.காஇலிருந்து வெளிநடப்புச் செய்த குழுவினர் பல ஆலோசனைகளின் முடிவில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியினை உருவாக்கின்றனர்.

இதன் பிரதான கொள்கை வட-கிழக்கு அடங்கிய தமிழர் தாயகத்திற்கு அதிகாரம் பங்களிக்கப்படும் வகையில் சமஷ்டிக் கோரிக்கையாக இருந்தது. கட்சியின் பொருளாதார கொள்கையாக சோஷலிச கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாதி, சமய வேறுபாடுகளையும் அதன் அடிப்படையிலான ஒடுக்குமுறைகளையும் இது நிராகரித்தது. தொடர் மக்கள் போராட்டங்களாக தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கின்றது.

## 1940கள்- தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள்

தமிழ் மக்களின் பாராளுமன்ற மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் முகமாக சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்கள் வசித்த பிரதேசங்களில் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படுகின்றன. மட்டக் களப்பு மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் (இன்றைய அம்பாறை மாவட்டம்) கல்லோயா திட்டம் என்கின்ற

நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டு மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளிலிருந்து சிங்கள மக்கள் அரசாங்கத்தினால் அங்கு குடியேற்றப்படுகின்றனர். இதன் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு அவற்றுள் 38 கிராமங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந் தளிக்கப்பட்டன. 6 கிராமங்கள் மட்டும் தமிழ் பேசும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தமிழ் கிராமங்கள் நீர்வசதி குறைந்த அல்லது நீரோட்டத்தின் எல்லையில் இருந்த கிராமங்களாகவே இருந்தன. 1959ல் பின்பு இக்குடியேற்றங்களை மையமாக வைத்து அம்பாறை மாவட்டம் உருவாக்கப்படுகின்றது.

இதைப் போல திருகோணமலை மாவட்டத்தில் மீனவர் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள், கைத்தொழிற் குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடி யேற்றங்கள், முப்படைகளுக்கான குடியேற்றங்கள் ஆகியன ஆரம்பிக்கப்படுகின்றன. இக்குடியேற்றங்களின் முக்கிய நோக்கங்கள் முன்பு குறிப்பிடப்பட்டது போல தமிழ் பிரதேசங்களில் தமிழ் மக்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்தை மாற்றி அவர்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தைக் குறைப்பதும் தமிழ் மக்களின் தாயகக் கோரிக்கையை நிராகரிக்குமுகமாக வடக்கு கிழக்கைத் துண்டாடுவதும் ஆகும். இதன்படி திருகோணமலைப் பிரதேசத்தை வளைத்து ஒரு வில் வடிவத்தில் குடி யேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிட்ட இந்த வில், திருகோணமலையை வடக்கிலிருந்து துண்டாடி யது. இதே போல திருகோணமலை மாவட்டத் திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் இடையேயுள்ள நிலத் தொடர்ச்சியும் துண்டாடப்பட்டது.

மேலும் இக்குடியேற்றப் பிரதேசங்களை மையமாக வைத்து புதிய தேர்தல் தொகுதிகளும் சிங்களப் பெரும் பான்மைப் பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டன.

## 1956 - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியும், தனிச்சிங்களச் சட்டமும்

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து ஆட்சியில் அமருவதற்காக "24 மணிநேரத்தில் தனிச் சிங்களம்" என்கின்ற வாக்குறுதியுடன் எஸ்.டபிள்யூ ஆர்.டீ பண்டார நாயகா தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்கின்றார். இதன் அடிப்படை யில் அமோக ஆதரவினைப் பெற்று ஆட்சியமைக் கின்றார். தனிச்சிங்களச் சட்டத்தையும் கொண்டு வரு கின்றார். 2,500 வருடங்களாக சிங்களமே •இந்நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக இருந்தது எனவும், காலனித் துவ ஆட்சியாளர்களே இதனை மாற்றினர் எனவும் சிங்களத் தலைவர்கள் அறைகூவினர்.

இச்சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப் படப்போகும் தினத்தில் தமிழ் கட்சிகள் சத்தியாக்கிரகப் போராட்டங்களை எற்பாடு செய்தன. இதனால் முதல் இரவே பாராளுமன்றத்தைச் சுற்றி முள்ளு வேலிகள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸார் சுற்றி வளைத்தனர். ஆனாலும் தமிழரசுக் கட்சி போராட்டத் தைக் கைவிடாமல் பாராளுமன்றத்திற்கு முன்பாக காலி முகத்திடலில் தமது தொண்டர்களுடன் கூடுகின்றனர். தங்கள் போராட்டத்தை விளக்கி சிங்களத்தில் எழுதிய துண்டுப் பிரசுரங்களைக் கொடுக்கச் சென்றவர்கள் காடை யர்களினால் தாக்கப்படுகின்றனர். பொலிஸார் பார்த்துக் கொண்டு நிற்கவே தடிகளாலும் கற்களாலும் அவர்கள் தாக்கப்பட்டனர். கொழும்பிலும் பல இடங்களில் தமிழ் மக்களும் தாக்கப்படுகின்றனர். பல பாராளுமன்ற உறுப் பினர்கள் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட னர். சத்தியாக்கிரக போராட்டம் ஆயுதமுனையில் கலைக்கப்படுகின்றது.

இதன் தொடர்ச்சியாக முதல் முறையாகத் தமிழ் மக்கள் மீதான இனக்கலவரங்கள் கல்லோயா பிரதேசத்தில் ஆரம்பித்தன.

இதைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு எங்கும் மாநாடுகள், யாத்திரைகள் என்று போராட்டங்களை முடுக்கி விடுகின்றது. இதன் முஸ்லிம் உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் ஒரு சுயாட்சித் தமிழரசு என்கின்ற கட்சியின் நோக்கத்தை மாற்றி, சுயாட்சித் தமிழரசும், சுயாட்சி முஸ்லிம் அரசும் என்று தனது நோக்கங்களை வரையறுக்கின்றது.

## 1957 - 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம்

அரசாங்கம் மோட்டார் வாகனங்களின் எண் தகடுகளில் 'ஸ்ரீ' என்கின்ற சிங்கள எழுத்தைப் போடும் சட்ட விதியைக் கொண்டு வருகின்றது. இந்நிலையில் வடக்கு கிழக்கு முழுக்க மோட்டார் வாகனத் தகடுகளில் சிங்கள எழுத்தை அழித்து தமிழ் எழுத்தைப் பொறிக்கும் போராட்டங்கள் ஆரம்பிக்கின்றன. இப்போராட்டங்களில் திருகோணமலையில் கறுப்புக் கொடி கட்ட கம்பத்தில் ஏறிய நடராசன் என்பவர் சிங்களவர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்படுகின்றார்.

## 1957 - பண்டா-செல்வா ஒப்பந்தம்

தமிழ் மக்களின் போராட்டங்களைக் கண்டு பண்டாரநாயகா ஒரு சமரசத்துக்கு வர முயற்சிக்கின்றார். பல இரவுகள் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் யூலை 26ம் திகதி பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றது. இதன்படி பிராந்திய சபைகளை தாபிப்பதாக முடிவாகின்றது. இவற்றின் மூலம்.

- வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க உதவி யுடன் நடைபெற்று வரும் சிங்களக் குடியேற்றங் கள் உடனடியாக நிறுத்தப்படும்

- சிறுபான்மை தேசியத்தின் மொழியாகிய தமிழ், உத்தியோக மொழியாக அங்கீகாரம் பெறும்.

- தமிழே வடக்கு கிழக்கின் மாகாண மொழியாக இருக்கும்.

- நாட்டின் எப்பாகத்திலும் தமிழ் மக்கள் தம் கருமங்களை அரசாங்கத்தோடு தமிழில் ஆற்றவும், தம் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் கல்வி ஊட்டி தமிழ் பண்பாட்டில் வளர்ப்பதற்குமான உரிமை பாதுகாக்கப்படும்.

- பிரதேச சபை சட்டத்தின் மூலம் பெருமளவு பிரதேச சுயாட்சி மக்களுக்கு வழங்கப்படும்.

தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாட்டில் இந்த உடன் படிக்கை ஆராயப்பட்டு, இது இறுதித் தீர்வல்ல என்றும், இடைக்காலத் தீர்வு மட்டுமே என்றும் வலியுறுத்தப் பட்டது. இணைப்பாட்சிக்கு உட்பட்ட மொழிவாரியான சுயாட்சித் தமிழ் அரசையும், நாடு முழுவதிலும் சிங்களத் திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தையும் , அனைவருக் கும் குடியுரிமை வழங்குவதையும் வலியுறுத்தி கட்சி தொடர்ந்தும் போராடும் என்றும் முடிவாகியது.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த ஒப்பந்தத்தைக் காரசாரமாக எதிர்த்தது. பண்டாரநாயகா வடக்கு கிழக்கை தமிழர்களுக்கு விற்றுவிட்டார் என்று ஆர்ப்பாட்டம் எடுத்து, ஜே ஆர் ஜெயவர்தனா கண்டி யாத்திரையைத் தொடருகின்றார். இந்த யாத்திரை ஆளும் கட்சியினால் இம்புல்கொடையில் முறியடிக்கப்பட்டது. பாதயாத் திரையை அரசு முறியடித்தாலும் கூட ஆர்ப்பாட்டங் களின் இலக்கு வெற்றிகண்டது. ஆர்ப்பாட்டங்களின்

பின்னர் அரசாங்கம் தொடர்ந்த எட்டு மாதங்களுக்கு இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பௌத்த மகா சங்கமும் பிராந்திய சபைகளை எதிர்த்தது. காணி அதிகாரங்கள் சபைகளுக்கு பகிரப்படக்கூடாதென்பதும், ஒன்றுக்கு மேற்பட்ட பிராந் திய சபைகள் ஒன்றாகச் சேர முடியும் என்பதால் இது தனிநாட்டுக்கு இட்டுச் செல்லலாம் என்பதும் அவர்கள் கருத்தாக இருந்தது.

## 1958 - சிங்களத் தமிழ் கலவரம்

ஏப்ரல் மாதம் பிக்கு எக்ஸத் பெரமுனவின் சார்பில் பௌத்த பிக்குகள் பண்டா செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பண்டாரநாயகாவின் வீட்டுக்கு முன் சத்தியாக்கிரகம் செய்தனர். பண்டார நாயகா ஒப்பந்தத்தை அவர்களின் முன்னால் கிழித்தெறிகின்றார். ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதாக அரசாங்கம் அன்றே பாராளு மன்றத்தில் அறிவிக்கின்றது.

இதே வேளை நாட்டில் அங்கங்கு தமிழ் எழுத்துக் களைத் தார் பூசி அழிக்கும் நடவடிக்கைகள் செயற் படுத்தப்படுகின்றன. மலையகத்தில் தொழிலாளர்கள் இதனை எதிர்த்த போராட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, பிரான்ஸிஸ், ஐயாவு என்கின்ற இரு தொழிலாளிகள் கொல்லப்படுகின்றனர். இவர்களது மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கு எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படு கின்றது.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தினால்தான் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது என்று சிங்களத் தலைவர்கள் தலைவர் செல்வநாயகத்தைச் சாடுகின்றனர். ஆயினும் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் எங்கும் தொடருகின்றது. இதில் ஈடுபட்ட பல தொண்டர்கள் அரசாங்கத்தினால் கைது செய்யப்படுகின்றனர்.

நாடெங்கிலும் சிங்கள தமிழ் இனக்கலவரம் மூளுகின்றது. அரசாங்கத்தில் பதவி வகித்த ஒரு சில அமைச்சர்களும் சிங்களக் காடையருக்கு தலைமை வகிக்கின்றனர். வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர், பாதுகாப்புடன் தமிழ் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். தமிழ் பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்களும் தமிழ் மக்களினால் தாக்கப்படுகின்ற னர். தமிழ் மக்களுக்கு உயிர்ச் சேதமும் உடைமைச் சேதங்களும் ஏற்பட்ட பின்னரே காலம் கடந்து அரசாங் கம் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்து இராணு வத்தை அழைத்து கலவரங்களை நிறுத்துகின்றது.

தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டு அதன் பல தலைவர்கள் வீட்டுக் காவலில் மாதக்கணக்காய் வைக்கப் படுகின்றனர். அதன் பின்னர் விடுதலையாக்கப்பட்ட தலைவர்கள் தொடர்ந்தும் தங்கள் சாத்வீகப் போராட் டத்தை முன்னெடுப்பதாக முடிவு செய்கின்றனர்.

## 1959 - பண்டாரநாயகாவின் மரணம்

பிரதம மந்திரி பண்டாரநாயகா தனது தேர்தல் வாக்குறுதிகளின்படி தீவிர சிங்களவாதக் கொள்கைகளை அமுல்படுத்தாத காரணத்தினால் பௌத்த பிக்கு ஒரு வரினால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். நாட்டில் அமைதி யின்மையும் பொதுத் தேர்தலுக்கான அறிகுறியும் ஏற்படு கின்றன.

இதே வேளை, தமிழரசுக் கட்சி யாழ் நகரிலுள்ள தேனீர்க் கடைகளில் சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டி வித்தியாசமான கோப்பைகளில் தேனீர் வழங்கும் நடவடிக்கையைக் கண்டித்து தீண்டாமை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை ஆரம்பிக்கின்றது. இத்துடன் உயர் கல்விக்கு வசதியற்ற மலையகப் பிள்ளைகளை புலமைப்பரிசில் கொடுத்து இலவசமாகப் படிப்பதற்கு

யாழ்ப்பாண பிரபல கல்லூரிகளில் சேர்த்து மலையகத்தின் அபிவிருத்தியைப் பற்றிய வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் எண்ணக் கருவினைத் தெரிவித்தது.

## 1960 - பொதுத்தேர்தல்கள்

இந்த வருடம் இலங்கை இரண்டு பொதுத் தேர்தல் களை சந்தித்தது. முதல் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் 19 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதைத் தவிர, கட்சியின் ஆதரவைப் பெற்ற இரு சுயேச்சை வேட்பாளர்கள் நிந்தாவூர், பொத்துவில் தொகுதிகளில் வெற்றி பெற்றார் கள். ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சியை விட நான்கு தொகுதிகளே அதிகமாகப் பெற்றிருந்ததனால் ஏனைய கட்சிகளின் ஆதரவை நாடியது. தமிழரசுக் கட்சி தனது ஆதரவைக் கொடுப்பதற்கு நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது.

- பண்டா செல்வா ஒப்பந்தம் செயற்படுத்தப்பட வேண்டும்.
- அதற்கிடையில் தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்
- இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட காலக்கெடு திகதி என்பது நீக்கப்பட்டு இரண்டு தலைமுறைக்கு இந்நாட்டில் பிறந்தோர் அனை வருக்கும் குடியுரிமை வழங்குவதன் மூலம் "நாடற்ற தமிழர்" என்ற நிலை நாளடைவில் மாற வேண்டும்.
- குடியுரிமைப் பிரச்சினை தீரும்வரை, பாராளு மன்றத்தின் நியமனப் பிரதிநிதிகள் ஆறு பேரில் நான்கு பேர் மலையக மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி இதை நிராகரிக்க, சுதந்திரக் கட்சி ஆதரிக்க முன்வருகின்றது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிம்மாசனப் பிரசங்கத்திலேயே தமிழரசுக் கட்சி அதற்கு எதிராக வாக்களித்து அந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்கின்றது.

ஆட்சி நிலையற்றதால் யூலை மாதம் இன்னுமொரு பொதுத் தேர்தல் நடக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைக் கின்றது. ஆனால் தமிழரசுக் கட்சியுடன் முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுகின்றது. நாடு முழுவதும் நீதி மன்றங்களில் சிங்கள மொழியையே வழங்கு மொழி யாக்கும் சட்டத்தைக் கொண்டு வருகின்றது. தனியார் பாடசாலைகளையெல்லாம் சுவீகரித்து அரச பாடசாலை களாக்குவதன் மூலம், கல்வியையும் சிங்களமயப்படுத் தும் முயற்சியில் ஈடுபடுகின்றது. திரும்பவும் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை மீறியதால் 1961 ஜனவரி முதலாந் திகதியிலிருந்து வடக்கு கிழக்கெங்கிலும் ஒத்துழையாமைப் போராட்டத்தை முன்னெடுப்பதென்று தமிழரசுக் கட்சி தீர்மானிக்கின்றது.

அனைத்து இலங்கை இஸ்லாமிய அமைப்பு இவ் வாண்டு தோற்றம் பெறுகின்றது. முஸ்லிம் மக்கள் தங்கள் இனத்தின் பாதுகாப்பு கருதி இஸ்லாத்தை அடிப்படை யாகக் கொண்ட இன அடையாளத்தை நிலைநாட்டுகின்ற னர். தமிழ் தங்களுடைய இயற்கையான மொழி அல்ல வென்றும், அது பிற இனத்திலிருந்து நடைமுறை கருதி கடன் பெற்ற மொழியே என்றும் வரைவிலக்கணம் தரு கின்றனர். இந்த வகையில் அரபிப் பாஷையைத் தங்கள் இயல் மொழியாகக் கொள்ளுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அறுபதுகளில் கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் தமது பொருளாதார, பண்பாட்டு விருத்தியைக் காண்கின்றனர். இதன் அடிப்படையில் தாம் ஒரு தனித்துவமான சக்தியாக உருவெடுக்க ஆரம்பிக் கின்றனர்.

## 1961 - சத்தியாக்கிரகம்

வடக்கு கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் அரசாங்க நிர்வாகம், ஸ்தம்பிதம் என்று கூறப்படும் அளவுக்கு அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொள்கின்றனர். பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டு சத்தியாக்கிர கத்தை முறியடிக்கப் பாாக்கின்றனர். இத்தாக்குதலில் மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் படுகாய முற்று இறக்கின்றார். இவ்வாறு 50 நாட்கள் சத்தியாக்கிர கம் தொடர்ந்து நடைபெற்றதால் யாழ் மாவட்ட அரச நிர்வாகம் முழுமையாக ஸ்தம்பிதம் அடைகின்றது. இப்போராட்டம் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கும் தொடர் கின்றது.

அரசின் சார்பில் நீதி அமைச்சர் பி.எல். பெர் னாண்டோ சத்தியாக்கிரகத்தை நிறுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றினாலும் மொழியுரிமை தொடர்பாக மிகக்குறைந்த கோரிக்கையில் கூட உடன்பாடு ஏற்படாததால் போராட்டத்தை தொடருவது என தீர்மானிக்கப்படுகின்றது.

## 1961 - தமிழ் அரசின் தபால் சேவை ஆரம்பிக்கப்படுதல்

போராட்டத்தின் தீவிரத்திற்கு முகம் கொடுக்க முடியாது அரசாங்கம் பங்கீட்டு உணவு (இலவச அரிசி) வழங்குவதை நிறுத்தி வடக்கு கிழக்கு மக்களைப் பணிய வைக்க முற்படுகின்றது. இந்நிலையில் போராட்டத்தை வேறு துறைகளிலும் விரிவாக்கும் நோக்கத்துடன் தமிழ் அரசியல் தலைவர்கள் அரச தபால் சேவை சட்டத்தை மீறித் தனியாக தமிழரசு தபால் சேவையொன்றை ஆரம்பிக்கின்றனர்.

ஏப்ரல் 14 ம் திகதி பகல் 12 மணிக்கு செல்வநாயகம் இதனை ஆரம்பித்து வைக்க 10,000 பேர் வரிசையில் நின்று தமிழரசு தபால் தலைகளைப் பெற்றனர். தமிழரசு தபால் சேவையின் தபால் மா அதிபராக செனட்டர் நடராசா நியமிக்கப்படுகின்றார். தமிழரசுத் தபால் பெட்டி கள் பல இடங்களில் வைக்கப்படுகின்றன.

1961 ஏப்ரல் 17ம் திகதி 12 மணிக்கு அவசரகாலச் சட்டமும், 48 மணி நேர ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக் கப்படுகின்றன. கச்சேரியின் முன் அமைதியாக இருந்த சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினரால் தூக்கப்படு கின்றனர். வடக்கு கிழக்கு இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட தலைவர்களும் பிரதான தொண்டர்களுமாக 74 பேர் விமானம் மூலம் பனா கொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்படுகின்ற னர். தமிழரசுக் கட்சி, சுதந்திரன் பத்திரிகை என்பன தடை செய்யப்பட்டதோடு சுதந்திரன் அலுவலகம் சீல் வைக்கப் படுகின்றது. பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்படுகின்றது.

சத்தியாக்கிரகம் நடைபெற்ற போது தொண்டமான் நேரடியாக வடக்கிற்குச் சென்று சத்தியாக்கிரகிகளை உற்சாகப்படுத்துகின்றார். இதனால் இ.தொ.கா பிரதிநிதி களும் கைது செய்யப்படுகின்றனர். தோட்டத் தொழிலை அத்தியாவசிய சேவையாக்கும் சட்ட விதிகளை அரசாங் கம் பிரகடனம் செய்கின்றது. எனினும் இதற்கு அஞ்சாமல் ஏப்ரல் 25ம் திகதி 5 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்குகின்றனர். தோட்டப் பகுதிக்கு இராணுவம் அனுப்பப்படுகின்றது. 6 மாதங்களின் பின்னர் கைதாகியிருந்த தமிழ் தலைவர் கள் விடுதலை செய்யப்படுகின்றனர். தமிழரசுக் கட்சியின் தடை நீங்க மேலும் சில மாதங்கள் செல்கின்றன. அதுவரை போராட்டங்கள் தொடர்கின்றன. பொலிஸாரின்

தாக்குதலினால் சில தொண்டர்களும் மேலுமொரு பாராளுமன்ற உறுப்பினரான வி.ஏ. கந்தையாவும் உயிர் இழக்கின்றனர்.

## 1963 – "எல்லாம் தமிழ் இயக்கம்" உருவாதல்

சிங்களத் திணிப்பை எதிர்ப்பதற்கும், தமிழ் மக்களை அரசுடனான தம் கருமங்களைத் தமிழில் ஆற்றத் தூண்டுவதற்குமான எல்லாம் தமிழ் இயக்கத்தை தமிழரசுக் கட்சி உருவாக்குகின்றது. இதன்படி தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தபால் நிலையங்கள், மற்றும் அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றில் விண்ணப்பங்கள், தந்திகள் முகவரிகள் என்பவற்றை தமிழில் எழுதுமாறு தூண்டப்படுகின்றார்கள்.

இதற்கு எதிர்ப்பாக 1964ம் ஆண்டு ஜனவரி முதல் தனிச்சிங்கள சட்டத்தை வடக்கு - கிழக்கில் அமுல் படுத்தப்போவதாக அரசாங்கம் அறிவிக்கின்றது. சிங்கள அரசாங்க ஊழியர்களையும், அதேவேளை தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைத் திணிக்கும் நோக்கில் 2000 சிங்கள ஆசிரியர்களையும், வட- கிழக்கிற்கு அனுப்பத் தீர்மானிக்கின்றது.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்தின் இந்தப் போக்கினைப் பகிஷ்கரிப்பது என்றும் இப்போராட்டத்தில் மாணவர்கள் பெற்றோர்களையும் இணைப்பது என்றும் தீர்மானித்தது. தமிழரசுக் கட்சியின் போராட்டத்தைப் பற்றிய அச்சத்தினால் சிங்கள ஊழியர்களும் ஆசிரியர்களும் வட-கிழக்கிற்குச் செல்ல மறுக்கின்றனர்.ஜனவரி முதலாம் தேதி அன்று மாபெரும் கண்டன ஊர்வலங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்ட கச்சேரிகளுக்கும் முன்னால் தனிச்சிங்களச் சட்டப் பிரதிகள் எரிக்கப்படுகின்றன.

## 1964 - பாதயாத்திரை

சாதிபேதத்தை ஒழிக்கவும் கட்சியின் இலட்சியங்களை மக்கள் முன் பிரச்சாரம் செய்யவும் பாதயாத்திரையை தமிழரசுக் கட்சி நடத்துகின்றது. செல்வநாயகம் தலைமையில் காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகி வடக்கு கிழக்கு எங்கும் செல்கின்றது.

## 1964 - சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினரை திரும்ப இந்தியாவுக்கு அனுப்பும் ஒப்பந்தத்தை சிறிமாவும் இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் மேற்கொள்ளுகின்றனர். இது பற்றி பாராளுமன்ற நியமன உறுப்பினர் தொண்டமானுடன் கூட கலந்தாலோசிக்கவில்லை. தமிழரசுக் கட்சி இதனைக் காரசாரமாக எதிர்த்தது.

## 1965 - டட்லி செல்வா ஒப்பந்தம்

மாவட்ட சபைகள் கட்டமைப்பு வழங்கப்பட்டது. இதில் காணி அதிகாரங்கள் இச்சபைகளுக்கு வழங்கப்பட்டு, குடியேற்றங்கள் நடைபெறும்பொழுது முதலில் அம்மாவட்டங்களில் உள்ள காணியில்லா மக்களுக்கு முன்னுரிமை வழங்கி பின்பே, மிகுதியிருந்தால், வெளி மாவட்டங்களிலிருந்து குடியேற்றவாசிகள் கொண்டு வரப்படவேண்டும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்துடன் தமிழரசுக் கட்சி தனது போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வந்து அரசாங்கத்தில் சேருகின்றது. தமிழரசுக் கட்சி அரசில் சேர்ந்ததனால் பழைய தமிழ் அரச ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியின்றி சம்பள உயர்வு, பதவி உயர்வு வழங்கப்படுகின்றது. புதிய ஊழியரின் சிங்களத் தேர்ச்சி எட்டாந்தரமாக்கப்

படுகின்றது. ஆனால் திறைசேரி அதிகாரிகள் ஒன்பதாந் தரச் சிங்களச் சோதனையை எட்டாந்தரம் எனக்கூறி தமிழ் அதிகாரிகளுக்கு நடத்தினார்கள். இந்த நடவடிக்கை கொடுக்கப்பட்ட சலுகைகளை முறியடித்தது.

## 1966 - தமிழ்மொழி உபயோக சட்ட விதிகள் மசோதா

1958 இல் பண்டாரநாயக்காவினால் கொண்டு வரப்பட்ட தமிழ்மொழி உபயோக சட்டத்தின் கீழ் அதன் இயங்கு விதிகள் தொடர்பான முன்னேற்ற சட்டமூலம் தமிழரசுக்கட்சியின் நிர்ப்பந்தத்தின் பேரில் பாராளுமன்றத் திற்குக் கொண்டு வரப்படுகின்றது. இதன் படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழையும் நிர்வாக மொழியாக வும், நாடு முழுவதிலும் தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ் மொழியில் அரசாங்கத்தோடு கருமமாற்றவும், ஒழுங்கு செய்யப் படுகின்றது. இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக்கட்சிகள் உட்பட சிங்களக்கட்சிகள் யாவும் காரசாரமாக எதிர்க்கின்றன. இச்சட்டவிதிகள் மூலச் சட்டத் தின் எல்லையை மீறியுள்ளன என அவை வலியுறுத்தின.

இது தொடர்பாக அரச தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதோடு, எதிர்க்கட்சிகள் விகாரமா தேவி பூங்காவில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தின. ஊர்வலம் கட்டுக்கடங்காமல் சென்றதால், பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் விளை வாக இரத்தினசார தேரோ என்ற பௌத்த பிக்கு சுடப் பட்டு மரணமடைந்தார். இருப்பினும் அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றியது. ஆனால் இது நடை முறையில் பெரிதாக செயற்படவில்லை

# 1968 - 1983

# தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தின் வித்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஊன்றிய காலம்

1965 இல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கம் பெற்ற தைத் தொடந்து அதன் போராட்ட அரசியல் வீழ்ச்சிப் போக்கை நோக்கிச் சென்றது. இவ் வீழ்ச்சிப் போக்கினால் கட்சியிலிருந்த தீவிரதேசியவாதசக்திகள், குறிப்பாக இளைஞர்கள், அதிருப்தியடைய ஆரம்பித்தார்கள். 1968இல் முத்துக்குமாரசுவாமி, சிவகுமாரன், மகாஉத்தமன் போன்றோர்கள் ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பின் தோற்றத் துடன் தமிழ் அரசியலில் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் கங்கிரஸ், இளைஞர் இயக்கங்கள் என மூன்று வகையான சக்திகள் தொழிற்படத் தொடங்குகின்றன.

## 1968 - கித்துள் ஊற்று குடியேற்றம் (திருமலை)

திருமலை மாவட்டத்தில் கித்துள் ஊற்று என்ற இடத்தில் ஒரு சிறு குளம் கட்டப்பட்டு அதில் சிங்கள குடியேற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. த.அ.க பல்லாயிரம் ரூபா செலவில் தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்தவர்களை அங்கு அத்துமீறி குடியேற வைத்தது. அப்பகுதியின் சிங்கள உதவி அரசாங்க அதிபர் அந்த இளைஞர்களின் வீடுகளுக்கு தீ வைத்ததோடு அவர்களைக் கைது செய்தார். பின்னர் காணி அமைச்சருடன் செய்த உடன்பாட்டின்படி அத்து

மீறி குடியேறிய இளைஞர் உட்பட பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் அங்கு குடியேற்றப்படுகின்றனர்.

## 1969 - மாவட்ட சபைகள் பற்றிய பிரேரணைகள்

த.அ.க. உடன் ஐ.தே.க செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மாவட்ட சபைகளை உருவாக்கி அதிகாரத்தைப் பரவலாக்குதல் பிரதானமாக இருந்தது. இது தொடர்பான சட்டமூலம் மு. திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்டு பல மாதங்கள் ஐ.தே.கட்சியினாலும் தமிழரசுக் கட்சியினாலும் ஆராயப்பட்டது. இறுதியில் இது தொடர்பான வெள்ளையறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அரச ஆதரவு ஊடக வியலாளர்கள், அரசாங்க கட்சி உறுப்பினர்கள், பௌத்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்போர் தீவிர எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்டனர். சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சிய டட்லி, மாவட்ட சபை மசோதாவை பாராளு மன்றத்தில் கொண்டு வர இயலாது என கூறுகின்றார். மீண்டும் ஒரு தடவை தமிழ் தலைமைகள் ஏமாறு கின்றன.

இந்நிலையிலும் த.அ.க தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை திருமலையில் நிறுவ நடவடிக்கை எடுத்தது. கோணேஸ்வரப் பகுதியைப் புனித பிரதேசமாக்கும் தீர்மானமும் எடுக்கப்படுகின்றது. இலங்கையின் வரலாற் றின்படி இது சிங்களவர்களினதும் பௌத்தர்களினதும் நாடு என்று தாம் கருதுவதால் பௌத்த பிக்குகள் இதனை எதிர்க்கின்றனர். டட்லி புனித பிரதேசத் திட்டத்தினை நிராகரிக்கின்றார். த.அ.க அரசிலிருந்து வெளியேறு கின்றது.

## தமிழ்ப் பிரதேசத்தை பௌத்த மயமாக்கும் போக்குகள்

திருகோணமலையை பௌத்த பிரதேசமாக்க முயற்சி செய்து சேருவாவிலவை அரசு உருவாக்குகின்றது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் பௌத்த சிங்களப் பாடசாலைகளை அமைக்கும் முயற்சியில் நான்கு பாடசாலைகள் புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படுகின்றன. த.அ.கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின் இவை பௌத்த் சிங்களப் பாடசாலைகளாக கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படுகின்றன. த.அ.க.யின் எதிர்ப்பினால் அங்கு வேறு வழியில்லாமல் தமிழ்மொழியே போதனா மொழியாக இருந்தது.

## 1970 - பொதுத் தேர்தல்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான கூட்டு முன்னணி 116 ஆசனங்களை அதாவது 2/3 பங்கு ஆசனங்களைக் கைப்பற்றுகின்றது. இக்கட்சிகளுக்குள்ளிருந்த முஸ்லிம் அணிகள் கல்வி அமைச்சினைக் கோரிப் பெற்றுக் கொள்கின்றன. பதியுதீன் முகம்மது கல்வி அமைச்சராக வருகின்றார். தமிழ் மக்களின் போராட்டத்துடன் இணைய விடாமல் முஸ்லிம் மக்களைத் தடுப்பதற்கு எந்த சலுகையையும் தரத் தயாராக அரசாங்கம் இருக்கின்றது. தமிழ் மாணவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் விஞ்ஞானப் பீடங்களில் கூடியளவு பிரவேசிப்பது ஒரு பிரச்சினையாக தேசிய அரசியலில் எடுக்கப்படுகின்றது. தமிழ் மாணவர்களின் அனுமதியைக் குறைப்பதற்கான தரப்படுத்தல் முறையை அறிமுகம் செய்யும் ஏற்பாடுகள் ஆரம்பிக்கின்றன. இந்த நகர்வுக்கு

தமிழ் மாணவர்கள் ஆக்ரோஷமாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

1970 நவம்பர் பாடசாலை பகிஷ்கரிப்புடன் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆரம்பிக்கின்றன. சுமார் பத்தாயிரம் மாணவர்கள் கலந்து கொள்ளுகின்றார்கள். தமிழரசுக் கட்சியின் மிதவாத, சந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிரான சில கோஷங்களும் ஊர்வலத்தில் எழுப்பப்படுகின்றன. தொடர்ந்து 1970 டிசெம்பர் மட்டக்களப்பிலும் மாணவர் பேரவையினால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்படுகின்றது.

## 1971 - பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறை அறிமுகம்

பல்கலைக்கழக விஞ்ஞான பீடங்களில் தமிழ் மொழி மூல மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் மொழிவாரித் தரப்படுதல் முறை கொண்டு வரப்படுகின்றது. இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்கு தமிழ் மாணவர்கள் சிங்கள, முஸ்லிம் மாணவர்களுடன் ஒப்பிடுகையில் கூடிய புள்ளிகள் எடுக்கவேண்டிய நிலையேற்படுகின்றது. இதை எதிர்க்கும் முகமாக தமிழ் மாணவர் பேரவை தோற்றம் பெறுகின்றது.

## 1972 - குடியரசு அரசியல் யாப்பு

ஐக்கிய முன்னணி அரசாங்கம், பிரித்தானிய அரசாங்கத்தின் ஆளுமைக்குக் கீழே இல்லாத ஒரு புதிய குடியரசு அரசியல் யாப்பைக் கொண்டு வருவதற்கான அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுகின்றது. இச்சபையில் தமிழ் கட்சிகள் பூரண சோசலிச பொருளாதாரத்தையும், சாதி சமய பேதமற்ற சமூக அமைப்பையும் கொண்ட, சுயாட்சி பெற்ற ஐந்து மாநிலங்களை உள்ளடக்கிய சமதர்ம

சமஷ்டிக் குடிய்ரசு அரசியல் யாப்பு ஒன்றினைத் தயாரித்து சமர்ப்பிக்கின்றன. தமிழ்மொழி விசேட சட்டமும் யாப்பிற்கான இந்த யோசனைகளில் உட்புகுத்தப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் நிர்ணயசபை இவற்றை ஆலோசனைக்கு எடுக்கவும் தயாரில்லாமலிருந்தது. தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறுகின்றது.

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய குடியரசு அரசியல் யாப்பின் பேரினவாதத் தன்மைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

- தேசிய அரசுப் பேரவை மீயுயர் கருவியாக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது.
- தேசிய அரசுப் பேரவையின் 157 அங்கத்தவர்களில் 19 பேர் மட்டுமே தமிழர்கள் எனவே தமிழர்களுக்கு எதிரான எச்சட்டத்தையும் உருவாக்கும், நிறைவேற்றும் நிலையில் அது இருந்தது.
- இது விடயத்தில் சோல்பரி அரசியல் திட்டத்தில் செயற்படுத்த முடியாமல் பெயரளவிலாவது இருந்த 29 பிரிவும், அதிகாரச் சமப்படுத்தலுக்கான கோமறைக்கழகம், நீதிமன்றங்களின் நீதிப்புனராய்வு அதிகாரம் என்பனவும் நீக்கப்பட்டன.
- சிங்கள மொழி அரச கரும மொழியாகவும் சட்டவாக்க மொழியாகவும் இருந்தது.
- நீதிமன்றங்கள், இணக்க சபைகள், நியாய சபைகள் ஆகிய எல்லாவற்றினதும் மொழி சிங்களமாக்கப்பட்டன.
- அரசசேவை, நீதிச் சேவை தொடர்பான பொறுப்புக்கள் அனைத்தும் அவைக்குரிய ஆணைக்குழுவிடமிருந்து அகற்றப்பட்டு ஒரு (சிங்களப் பெரும்பான்மை) அமைச்சரவையில் ஒப்புவிக்கப்பட்டது.

- பௌத்த மதத்திற்கு விசேட அந்தஸ்து வழங்கப் பட்டது.

புதிய அரசியலமைப்புச் சட்டம் தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்காக செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். இந்தக் கொள்கையின் அடிப்படை யில் இடைத்தேர்தலுக்கு நிற்கும்படி அரசாங்கத்திடம் அவர் சவால் விட, அரசாங்கம் அவசரகாலச் சட்டத் தினை உபயோகித்து இடைத்தேர்தலைப் பின்போடு கின்றது. தொடர்ந்து தமிழ் பிரதேசங்களில் கறுப்புக்கொடி போன்ற போராட்டங்கள் நடைபெறுகின்றன.

## 1972 - தமிழர் கூட்டணியின் தோற்றம்

அரசியற் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் ஆகியவையும் கட்சி சார்பற்ற பெரியோர் களும் பங்குபற்றிய மாநாட்டில். அனைத்து தமிழ் கட்சி களும் சேர்ந்த கூட்டணி உருவாக்கப்படுகின்றது. அனைத்துக் கட்சிகளும் கட்சி சாரா ஸ்தாபனங்களும் இதில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிரந்தரமான நட வடிக்கைக் குழு உருவாக்கப்படுகின்றது. முதலாவது குடியரசு தினப் பகிஷ்கரிப்பு போன்ற பல போராட் டங்கள் இதனால் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மாணவர் பேரவை பஸ் எரிப்பு, தேசியக் கொடி எரிப்பு என முதல் முறையாக வன்முறையில் ஈடுபடுகின்றது. 1972 ம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்த பிரதியமைச்சர் சோமவீர சந்திரசிறியின் காருக்கு சிவகுமாரனால் வீசப்பட்ட குண்டில் மயிரிழையில் பிரதியமைச்சர் உயிர் தப்புகின்றார். கொழும்பில் திசைவீரசிங்கம் வட்டுக்கோட்டை பாராளு மன்ற உறுப்பினர் தியாகராசாவை சுடுகின்றார். ஆயினும் தியாகராசா உயிர் தப்புகின்றார். ஒரு கோயில் மூலஸ்

தானத்தில் தமிழ் மாணவர் பேரவை மறைவாக வைத் திருந்த கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியன பொலிஸாரினால் கைப்பற்றப்படுகின்றன. இதன் பின்ன ரான படையினரின் தேடுதலில் மாணவர் பேரவையின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பாலானாவர்களும் முன்னணி உறுப்பினர்களும் கைது செய்யப்படுகின்றனர். 1972 இன் இறுதியில் மாணவர் பேரவை சிதைவடை கின்றது.

தமிழர் கூட்டணி அவசர அவசரமாக அரசுக்கு ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அனுப்பு கின்றது. மூன்று மாத கால அவகாசத்திற்குள் இக்கோரிக் கையின் அடிப்படையில் அரசியலமைப்புக்குள் திருத்தங் கள் கொண்டு வராத பட்சத்தில், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலையைக் காண சாத்வீக வழியில் போராடுவது என்று அறிவிக்கின்றது.

கூட்டணி சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கை களாவன:

1. அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப் பட்டிருக்கும் அதே இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்படல் வேண்டும்
2. இலங்கை மதசார்பற்ற அரசாகப் பிரகடனப்படுத்தப் படுவதன் மூலம் எல்லா மதங்களையும் சமமாகப் பேணி வளர்த்தல் வேண்டும்.
3. இந்நாட்டைத் தம் தாயகமாகக் கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமை வழங் கும் குடியுரிமைச் சட்டங்கள் அரசியல் அமைப்பில் இடம் பெறல் வேண்டும்.
4. நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டப்படக்கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம் பெறல் வேண்டும்

5. சாதியையும், பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப் பதையும் அரசியல் யாப்பின் மூலம் ஒழித்தல் வேண்டும்.

6. அதிகாரம் பரவலாக்கப்பட்டு மக்கள் பங்கு கொள் ளும் ஜனநாயக ஆட்சி அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும்

இந்த மகஜர் தமிழர் கூட்டணித் தலைவர் செல்வ நாயகத்தினால் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அரசாங்கம் இக்கோரிக்கை களை ஏற்றெடுத்தும் பார்க்கவில்லை.

## 1973 - தமிழ் இளைஞர் பேரவை தோற்றம் பெறல்

1972ன் பிற்பகுதியில் தமிழ் மாணவர் பேரவை தலைமறைவு இயக்கமாக மாறவே, விடுதலைப் போராட்ட நோக்கத்தோடு தமிழ் இளைஞர் பேரவை வரதராஜப் பெருமாள், பத்மநாபா போன்றவர்களினால் உருவாக்கப் படுகின்றது. தமிழர் தம்மைத் தாமே ஆள வேண்டும் என்ற கோஷத்தினையும் தமிழரசுக் கட்சி எதிர்ப்பு நிலைப் பாட்டினையும் இது முன்வைக்கின்றது. ஆர்ப்பாட்ட போராட்டங்களை இது முன்னெடுக்கின்றது.

## 1974 - நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு

நான்காவது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபோது அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனாலும் மாநாடு வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும்போது 10,000 மக்கள் கூடியிருந்த வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையில் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மின்சாரக் கம்பி அறுந்து

தாக்கியதில் 9 பேர் மரணமானார்கள். இந்த மாநாட்டில் சிவகுமாரன் என்கின்ற தீவிரவாத இளைஞன் வன்னியில் போர்த்துக்கேயரோடு போராடிய அரசன் பண்டார வன்னியனாக வேடம் பூண்டு அலங்கார ஊர்தியில் வருகின்றார். இவர், நடந்த அசம்பாவிதங்களைக் கண்டு அவற்றைத் தீர்க்க வன்முறைதான் வழி எனச் சபதம் பூணுகின்றார்.

சிவகுமாரனும் அவனது சகாக்களும் வங்கிக் கொள்ளை, ஆயுத நடவடிக்கைகள் என்று பல நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். அரசாங்கம் சிவகுமாரனைப் பிடித்துத் தருபவர்களுக்கு ரூ 10,000 சன்மானம் என அறிவிக்கின்றது. இறுதியில் சிவகுமாரன் கைது செய்யப்படும் வேளை சயனைட் அருந்தித் தற்கொலை செய்கின்றார். இவரது மரணச் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

## 1974 - தமிழ் புதிய புலிகள் தோற்றம்

பிரபாகரன் உட்பட பல இளைஞர்கள் இணைந்து தமிழ் புதிய புலிகள் உருவாகின்றது. இது வங்கிக் கொள்ளைகள், யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவின் கொலை போன்றவற்றைச் செய்கின்றது.

## 1975 - தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தோற்றம்

தமிழ் இளைஞர் பேரவை தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களின் செயற்பாட்டினால் பிளவுபட்டது என முன்னால் கண்டோம். இதில் பிரிந்து சென்ற வரதராஜப் பெருமாள் உட்பட ஒரு சாரார் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினை ஆரம்பிக்கின்றனர். இது தமிழ் ஈழமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வு

எனக் கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிடுகின்றது. அரசியல் வகுப்புக்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றை முதலில் நடத்தியிருந்தாலும் 1977 பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிளவுபட்டு சிதைகின்றது. குட்டிமணி குழுவினர் இவர்களின் அனுமதியுடன் இதன் பெயரைத் தங்கள் அமைப்புக்குப் பயன்படுத்துகின்றனர். ஆயுத நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த வருடத்தின் பிற்பகுதிகளில் ஈழப்புரட்சி அமைப்பு தோற்றம் பெறுகின்றது. தமிழீழத்தில் புரட்சிகர மாற்றம் வேண்டும் என்றும், மலையக மக்களே ஈழத்தின் புரட்சிகரமான வர்க்கமாகையால் அவர்களே புரட்சியின் தலைமைச் சக்தி எனும் கோட்பாடுகள் இதனால் முன்வைக்கப்படுகின்றன.

## 1976 - தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தோற்றம்

தமிழ் புதிய புலிகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்து இந்த இயக்கத்தின் மத்திய குழுவில் பிரபாகரன், உமா மகேஸ்வரன் உட்பட ஐந்து பேர் தங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

## 1976 - வட்டுக்கோட்டை மாநாடு

தமிழர் கூட்டணி தனது வட்டுக் கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி (த.வி.கூ) எனப் பெயர் மாற்றம் செய்கின்றது. இக்கூட்டணிக்கு முப்பெரும் தலைவர்களாக செல்வநாயகம், ஜி.ஜி பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அமிர்த லிங்கம் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஒவ்வொரு நாட்டுக்குமுள்ள சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோஷலிஸத் தமிழீழம் அமைக்கப்படும் என்கின்ற தீர்மானமும் இங்கு எடுக்கப்படுகின்றது. தமிழீழத்தின் பிரஜைகளாக தமிழீழப் பிரதேசத்தில் வாழும் அனைவரும் அடங்குவர் என்றும், இலங்கையில் எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களும் இலங்கை மூதாதையர்களைக் கொண்ட உலகின் எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களும் அங்கீகரிக்கப்படுவர் என்றும் சொல்லப்பட்டது.

## 1977 - பொதுத் தேர்தல்

இந்தப் பொதுத் தேர்தலை த.வி.கூ. தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாக பிரகடனப்படுத்தியது. தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் ஈழ தேசிய மன்றம் உருவாக்கப்பட்டு தமிழ் ஈழத்துக்கான முன்னெடுப்புக்கள் நடைபெறும் என்றும் கூறியது. பின்னைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், இந்தக் காலத்தில் த.வி. கூட்டணியின் பீரங்கிப் பேச்சாளராக இத்தேர்தலில் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்றும் தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான கல்வி, குடியேற்றங்கள், தமிழ் மொழி உபயோகம், அரசதுறைகளில் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு சர்வகட்சி மாநாடு மூலமாக தீர்வு காணப்படும் எனவும் குறிப்பிடுகின்றது.

ஸ்ரீ.ல.சு.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சகல சிறுபான்மை இன மக்களும் எதிர்நோக்கும் கலாசார சமூக, மற்றும் மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் சகல தேசிய இனங்களினதும் பிரதிநிதிகளைக்

கொண்ட அரசு ஆலோசனைச் சபை ஒனறினை அமைப்பதாக வாக்குறுதி அளிக்கின்றது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்று முதல் முதல் அங்கீகரிக்கப்பட்ட இத் தேர்தலில் த.வி.கூ. கல்குடா தேர்தல் தொகுதியைத் தவிர அனைத்திலும் வெற்றி பெறுகின்றது. ஆனால் த.வி.கூ. நிறுத்திய முஸ்லிம் வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைகின்றனர்.

ஐ.தே.க. 5/6 ஆசனங்களைக் கைப்பற்றி பெரு வெற்றிபெற ஸ்ரீ.ல.சு.க. 8 ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைகின்றது. இதனால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் தலைமைப் பதவி த.வி.கூட்டணியினை வந்தடைகின்றது. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்று பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தமக்கு தந்த தனி நாட்டுக்கான ஆணையைப் பிரகடனப்படுத்துகின்றார்.

## 1977 - இனக் கலவரம்

1977 ஆகஸ்ட் மாதம் யாழ் புனித பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவில் பொலீஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து கலவரம் ஆரம்பிக்கின்றது. 50,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடுகளை இழந்ததோடு நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்படுகின்றனர்.

புலிகளுக்கும் த.வி. கூட்டணிக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. கூட்டணியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு புலிகள் இயக்கம் தலைமறைவு இயக்கமாக இயங்குவது என்றும் கூட்டணியினர் நிதி மற்றும் ஆயுத உதவிகளைப் பெற்றுக்

கொடுப்பது என்றும் முடிவு செய்யப்படுகின்றது. புலிகள் இயக்கம் தன்னைப் பகிரங்கப்படுத்த ஆரம்பித்து தமது தாக்குதல்களுக்கு உரிமை கோருகின்றது.

## 1978 - புலிகள் இயக்கத்தையும் (புலிகள் போன்ற) ஏனைய ஆயுத அமைப்புகளையும் தடை செய்யும் சட்டம்

புலிகளை ஆதரிப்பவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்னும் கடுமையான சட்டம் கொண்டுவரப்படுகின்றது.

## புதிய அரசியல் யாப்பு

ஐ.தே.க. தனது நீண்டகால நோக்கத்தை நிறை வேற்றும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கான அரசியலமைப்பை அறிமுகப்படுத்துகின்றது. இதில், மத்திய அரசாங்கத்தில் ஜனாதிபதியின் பதவியில் அதிகாரங்கள் எல்லாம் குவிக்கப்பட்டு ஒற்றையாட்சி அம்சங்கள் உறுதியாகப் பேணப்பட்டது. மொழி, மதம், குடியேற்றங்கள் போன்ற என்னென்ன விடயங்களில் தமிழ் மக்கள் முன்பு முரண்பட்டு நின்றார்களோ அவற்றையெல்லாம் தனக்குள் கொண்டதாக இருந்தது. அவற்றைப் பாதுகாக்கக்கூடிய வகையில் உறுதியான ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் அரசிய லமைப்பு திருத்தம் கொண்டுவர வேண்டுமாயின் பாராளு மன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறை வேற்றப்படுவதோடு மக்கள் தீர்ப்பு ஒன்றின் (சர்வஜன வாக்கெடுப்பு) மூலம் மக்களின் சம்மதமும் அவசியம் எனக் கூறப்பட்டது. அவையாவன,

- இலங்கை குடியரசு ஒரு ஒற்றையாட்சி அரசு என்பதை மாற்றுதல்.
- இலங்கை குடியரசின் இறைமை சம்பந்தமான ஏற்பாடுகளை மாற்றுதல்.
- இலங்கை குடியரசின் தேசியக் கொடியினை மாற்றுதல்.
- இலங்கை குடியரசின் தேசிய கீதத்தை மாற்றுதல்.
- இலங்கை குடியரசின் தேசிய தினத்தை மாற்றுதல்.
- பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட முதன்மை ஸ்தானத்தை மாற்றுதல்.

## 1979 - பயங்கரவாதத் தடைச் சட்டம்

தமிழ் இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் படையினர் சித்திரவதை செய்து பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியமாகக் கொள்ள முடியும், நீண்ட நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைக்க முடியும், நீதிவிசாரணையின்றி சடலங்களை அடக்கம் செய்ய முடியும். இந்தச் சட்டத்துடன், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைத் தணிக்கையும் கொண்டு வரப்பட்டது.

## 1981 -மாவட்ட அபிவிருத்திச் சபை அறிமுகமும் தேர்தலும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட அபி விருத்திச் சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிமுகம் செய்கின்றது. இவை உள்ளூராட்சி மன்றங் களைப் போன்ற அதிகாரங்கள் மட்டுமே கொண்டிருந்த

தாலும் நிதிவளம் மிகக் குறைவாக இருந்ததாலும் தமிழ் இளைஞர் அமைப்புக்கள் இத்தீர்விற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் பங்குபற்ற முடிவு செய்கின்றது.

தேர்தல் நடவடிக்கைக்கென அமைச்சர் காமினி திசாநாயகா தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்கள் யாழ் பொதுநூலகம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயம், பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இல்லம் என்பவற்றிற்கு தீ மூட்டினர். மேலும், இவர்கள் தேர்தலின்போது வாக்குப் பெட்டிகளைக் கடத்தி கள்ள வாக்குகளை போட்டு நிரப்பினார்கள். எனினும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் அனைத்து ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியது. .

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்திற்கெதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்படுகின்றது.

## 1982 - சர்வஜன வாக்கெடுப்பு (மக்கள் தீர்ப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைப் பாராளுமன்றத்தில் மேலும் 6 வருடம் நீடிப்பதற்காக ஜேஆர் ஜெயவர்தன மக்கள் தீர்ப்புக்குப் போகத் தீர்மானிக்கின்றார். தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஆட்சி நீடிக்கக்கூடாது என வாக்களித்தும் ஆளுங்கட்சி வெற்றி பெறுகின்றது.

# 1983 - 1990

# ஆயுதப்போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ச்சியடைந்த காலம்

## 1983 - இனக் கலவரம்

விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தி னர் இறந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகள் நடக்கின்றன. பல மாவட்டங்களில் ஆளுங்கட்சி அரசியல் வாதிகளும், அமைச்சர்களும் வன்செயல்களுக்குத் தலைமை வகித்து அதில் ஈடுபடுகின்றனர். காடையர் களைக் கொண்டு மாவட்டந்தோறும் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் ஜூலை 25 என்கின்ற ஒரே நாளில் வன்முறை கள் நடத்தப்பட்ட விதம் இது முன்னரே திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளே என அவதானித்தவர் மனதில் சந்தேகங் களைக் கிளப்புகின்றன.

காடையர்களினதும் ஆயுதப்படையினரினதும் வன்முறைகள் வெளியே நடந்து கொண்டிருந்த அதே நேரம், வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்த 53 தமிழ் கைதிகள் ஏனைய சிறைக் கைதிகளினால் கோரமாகக் கொலை செய்யப்படுகின்றனர். ஜூலை 29ல் கொழும்பு நகருக்கு ஒரு புலி உறுப்பினர் தாக்குதலுக்கு வந்து விட்டார் என்கின்ற வதந்தி பரவவே கொழும்பு நகரம் முழுக்க பயத்தில் ஆழ்ந்து அல்லோலகல்லோலப்படு கின்றது. இந்தக் கலவரத்தில் கொழும்பு கடற்கரை வீதியில் 13 இளைஞர்கள் உட்பட ஏராளமான தமிழர் கொலை செய்யப்படுகின்றனர்.

தனிநாட்டுக்கு ஆதரவாக செயற்படுவதும் உதவுவதும் தண்டனைக்குரிய குற்றமெனவும், அவ்வாறு உதவுவோர்களின் சொத்துக்கள் கடவுச்சீட்டு ஆகியன பறிமுதல் செய்யப்படும் என்கின்றதுமான அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தச் சட்டமும் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி இதற்கேற்ப சத்தியப் பிரமாணம் செய்யாமல் பாராளுமன்றத்திலிருந்து விலகி இந்தியாவிற்கு சென்றது. இத்துடன் தமிழர் அரசியலில் மிதவாத அரசியலின் பாத்திரம் முடிவுக்கு வருகின்றது.

## 1983 - 1987 ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா ஆதரவு

ஜூலை கலவரங்களினைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் ஈழ விடுதலை இயக்கங்களில் சேருகின்றனர். கணிசமான அளவு முஸ்லிம் இளைஞர்களும் சேருகின்றனர். இந்தியா இந்த இயக்கங்களுக்கு ஆயுதங்களையும், பயிற்சிகளையும், வேறு வசதிகளையும் வழங்குகின்றது.

## 1984 - இந்திராகாந்தி மரணம்

இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். வடக்கு கிழக்கு பிரதேசம் எல்லாம் துக்கம் அனுஷ்டித்தது. ராஜீவ்காந்தி பிரதமராகின்றார்.

## 1985 - திம்பு மாநாடு

இந்தியாவின் முயற்சியால் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் பூட்டான் தலைநகர் திம்புவில் நடக்கின்றன. தமிழ் மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், டெலோ, புளொட் ஆகிய

இயக்கங்களோடு தமிழர் விடுதலைக் கூட்டணியும் பங்கு பற்றுகின்றது. தமிழ்ப் பிரதிநிதிகள் திம்புக்கோரிக்கை என அழைக்கப்படுகின்ற 4 அம்சக் கோரிக்கையினை முன்வைத்தனர். அவையாவன,

அ. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்.

ஆ. வட-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்.

இ. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

ஈ. இலங்கையில் வாழும் அனைவருக்கும் பிரஜா வுரிமை.

தமிழர் தரப்பு கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரிக்கவே, தமிழ்ப் பிரதிநிதிகள் மாநாட்டினை பகிஷ்கரித்து வெளியேறுகின்றனர்.

கிழக்கில், தமிழ் முஸ்லிம் கலவரங்கள் ஆங்காங்கே வெடிக்கின்றன. இக்கலவரங்களில் தமிழ் போராளிகள் சிலர் எடுத்த நிலைப்பாடு கண்டு, முஸ்லிம் போராளிகள் இயக்கங்களில் இருந்து விலகுகின்றனர்.

## 1986 - பெங்களுர் சார்க் மாநாடு

பெங்களுரில் நடைபெற்ற சார்க் மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதி வருகை தந்தபோது அவருடன் இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் இலங்கை அரசாங்கத்தினால் ஒரு திட்டம் முன்வைக்கப் பட்டது. அதில் கிழக்கு மாகாணம் மூன்று பிரதேசங் களாகப் பிரிக்கப்பட்டு குறைந்தளவிலான அதிகாரப் பங்கீடும் வழங்கப்பட்டது. அரசாங்கத் திட்டத்தினை புலிகள் நிராகரிக்கின்றனர்.

## 1986 - புலிகள் ஏனைய இயக்கங்களை தடை செய்தல்

இந்தியாவின் கையாட்களாக செயற்படுகின்றனர் என்கின்ற குற்றச்சாட்டில் புலிகள் முதலில் டெலோ இயக்கத்தையும் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தையும் தடைசெய்து தாக்குதல்களை மேற்கொள்ளுகின்றனர். புளொட் இயக்கம் தானாகவே பணிகளை நிறுத்திக் கொள்ளுகின்றது. இதிலிருந்து இயக்கங்களுக்கு இடையே ஆட்கொலைகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

கொழும்பைச் சார்ந்த முஸ்லிம் தலைமைத்துவங்கள் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப் அவர்களினால் ஆரம்பிக்கப் படுகின்றது. இது கிழக்கைத் தனது தளமாகக் கொள்ளு கின்றது.

## 1987 - வடமராட்சிப்போர்

அரசாங்கம் வடமராட்சியைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இந்தியா இராமேஸ்வரத்தில் இருந்து தமிழ் அகதிகளுக்காக உணவுப் பொருட்களை இந்தியப் படகுகளில் அனுப்ப, இலங்கைக் கடற்படையினர் அதனை இடைமறித்து திருப்பி அனுப்புகின்றனர். இந்திய விமானங்கள் இலங்கைக்குள் அத்துமீறி நுழைந்து யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்டன. இதனுடன் வடமராட்சி இராணுவ நடவடிக்கை இலங்கை அரசாங் கத்தினால் கைவிடப்பட்டது.

## இலங்கை இந்திய ஒப்பந்தம்

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுத் தீர்வுக்கு இந்திய அரசாங்கம் பொறுப்பாளியாக இருக்கும் ஒரு ஒப்பந்தத்தை இந்தியா வரைந்து இலங்கை அரசாங்கத்தி னதும், சகல தமிழ் இயக்கங்களினதும் அங்கீகாரத்தைக் கோருகின்றது. புலிகளின் ஆதரவினைப் பெற்றுக்கொள் வதற்காக அது பிரபாகரனைப் புதுடில்லிக்கு அழைத்துச் சென்று அங்கு அசோக் ஹோட்டலில் தடுப்புக்காவல் சூழலில் வைக்கின்றது. ஒப்பந்தத்தினை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டபோதும் பிரபாகரன் மறுக்கின்றார். இறுதியில் ராஜீவ்காந்தியே அவரை நேரடியாக சந்தித்து வட-கிழக்கு இணைப்பிற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது என்றும், ஆயுதங்களை முழுமை யாக கையளிக்கத் தேவையில்லை என்றும் உத்தர வாதங்களைக் கொடுத்ததால் பிரபாகரன் ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவிக்கின்றார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை கொழும்பில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கைச்சாத்திடுகின்றனர். இதன்படி பாராளுமன்றத்திற்கான 13வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு மாகாணசபை ஆட்சி இலங்கைக்கு அறிமுகமாகின்றது. மாகாணசபைக்கு விரிவான திட்ட அமுலாக்க அதிகாரம் இருக்க, மத்திய அரசாங்கம் அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது. உதாரணமாக, மாகாண அரசாங்கம் கொண்டிருக்கும் எந்த அதிகாரத்தையும் மத்திய அரசாங்கம் தனதாக ஒரு வர்த்தமானி அறிவித்த லுடன் ஆக்க முடியும். அத்துடன், மாகாண அரசைக் கலைக்கவும் முடியும். ஸ்ரீலசுக, ஜேவிபி போன்றனவும் ஐக்கிய தேசியக் கட்சியில் பிரேமதாசா பிரிவினரும் ஒப்பந்தத்தினை எதிர்க்கின்றனர். கொழும்பில் ஆர்ப்

பாட்டங்களும் வன்முறைகளும் இடம்பெறுகின்றன. இந்திய அமைதி காக்கும் படை வட-கிழக்கில் நிலை கொள்ளுகின்றது.

வடக்கு கிழக்கில் மாகாணசபைக்கான ஒரு இடைக் கால நிர்வாகசபை உருவாக்கும் முயற்சி தோல்வியடை கின்றது. புலிகளின் யாழ் பிராந்திய அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் பல கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்து மரணிக்கின்றார். புலிகளின் உறுப்பினர்கள் 12 பேர் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படுகின்ற னர். அரசாங்கம் அவர்களைக் கொழும்புக்கு கொண்டு சென்று விசாரிக்க முற்படுகின்றது. அவர்கள் அனை வரும் சயனைட் விழுங்கி தற்கொலை செய்கின்றனர். புலிகள் இந்திய அமைதிப்படைக்கு எதிராக போரைத் தொடங்குகின்றனர்.

இந்தப் போர் சுமார் 2 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்தது. இதன்போது புலிகள் தங்களுடைய தளப் பிரதேசங்களை முழுமையாக வன்னிக் காடுகளுக்கு மாற்றுகின்றனர்.

இந்திய இராணுவத்திற்கு எதிரான தமது உணர்வு களை ஜே.வி.பி.யினரும் தென்னிலங்கையில் காட்டு கின்றனர். இந்தியப் பொருட்கள் வாங்குபவர்களையும் அவற்றை விற்பவர்களையும் படுகொலை செய்கின்றனர்.

## 1988 - வடக்கு கிழக்கிற்கான மாகாண சபைத் தேர்தல்

வடக்கில் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் நடை பெற்ற போது புலிகளுக்கு ஆதரவான சக்திகள் வேட்பு மனுத் தாக்கல் செய்வதை இந்திய அமைதிப் படை தடுக்கின்றது. இதனால் இந்தியாவுக்கு ஆதரவான

ஈ.பி.ஆர்.எல்.எப். ஈ.என்.டி.எல்.எப் கூட்டணி மட்டும் வேட்புமனுக்களை தாக்கல் செய்கின்றன. வேறு கட்சிகள் தாக்கல் செய்யாததினால் வடக்கில் உள்ள இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் மேற்கூறிய கூட்டணியின் வேட்பாளர்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்படுகின்றனர். கிழக்கில் இக்கூட்டணியுடன் முஸ்லிம் காங்கிரசும், ஐ.தே. கட்சியும் போட்டியிடுகின்றன. ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி. எல்.எப் கூட்டணியும் முஸ்லிம் காங்கிரஸும் சமமான ஆசனங்களை கிழக்கில் பெற ஐ.தே.க. ஒரு ஆசனத்தை மட்டும் பெறுகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் ஈ.என்.டி.எல்.எப் கூட்டணி ஆட்சிப் பொறுப்பினை ஏற்று வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக பதவியேற்கின்றார்.

வட-கிழக்கில் முழு அதிகாரத்துடனும் இருந்த இந்திய இராணுவம் தங்களது நலன்களைப் புறந்தள்ளி நடப்பதாக முஸ்லிம் மக்கள் அதிருப்தி கொள்ளுகின்றனர்.

## 1989 - ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசா ஜனாதிபதி யானதும் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கு கிறார். இந்திய இராணுவத்தைத் தோற்கடிக்கவென புலிகளுக்கு ஆயுதவசதிகளையும் நிதி வசதிகளையும் வழங்குகின்றார். இந்தியாவில் ஆட்சிமாற்றம் நடைபெற்று ஜனதா தளத்தின் தலைவரான வி.பி. சிங் பிரதமராகப் பதவி யேற்றவுடன், இலங்கை ஜனாதிபதியின் கோரிக் கையை ஏற்று இந்திய இராணுவத்தை படிப்படியாக வாபஸ் பெறுகின்றார். இந்திய இராணுவம் தான் போக முதல் வட- கிழக்கு மாகாண அரசாங்கம் விடுதலைப் புலிகளுக் கெதிராகப் போராடுவதற்கென ஒரு தமிழ் தேசியப் படையை பலாத்காரமாகச் சேர்க்கப்பட்ட இளைஞர்களைக் கொண்டு உருவாக்குகின்றது.

## 1990 - ஈழப்பிரகடனம்

வடகிழக்கில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வரதராஜப் பெருமாளும் ஏனையோரும் கொழும்பில் நிலை கொண்டுள்ள அரசாங்கத்துடன் அதிகாரப் பகிர்வு தொடர்பாகத் தொடர்ந்த இழுபறியில் ஈடுபடுகின்றனர். மத்திய அரசாங்கம் உடன்படிக்கையில் காணப்பட்ட பெரும்பாலான அதிகாரப் பரவலாக்கப்பட்ட நடவடிக்கைகளையும் வட-கிழக்கு மாகாண அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுக்கவில்லை. இந் நிலையில் வரதராஜப் பெருமாள் ஒருதலைப்பட்சமான ஈழப் பிரகடனத்தை விடுக்கின்றார். பிரேமதாஸா வட-கிழக்கு மாகாண சபையைக் கலைக்கின்றார்.

## இரண்டாவது ஈழப்போர்

இந்திய அமைதிப்படை வெளியேறுகின்றது. அதனுடன், மாகாணசபை அரசாங்கத்துடன் தொடர்புடைய முக்கிய அரசியல் உறுப்பினர்கள் அனைவரும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். புலிகள் இந்திய இராணுவம் நிலைபெற்றிருந்த இடங்களில் தங்கள் மேலாதிக்கத்தைக் கொண்டுவருகின்றனர். இந்திய இராணுவம் கிளம்பி மூன்று மாதங்களின் பின்னர், பிரேமதாஸா புலிகள் பேச்சுவார்த்தைகள் முறிந்து இரண்டாவது ஈழப்போர் ஆரம்பிக்கின்றது.

## வடக்கிலுள்ள முஸ்லிம்கள் வெளியேற்றம்

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே, போர் வெடித்த சில வாரங்களுக்கிடையே, கிழக்கில் காத்தான்குடி மற்றும் ஏறாவூர்ப் பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை தொழுகையில் இருந்தவர்கள் கண்மூடித்தனமாக சுட்டுக் கொலை செய்யப்படு

கின்றார்கள். உடனே, கிழக்குவாழ் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே என்றுமில்லாத இரத்தக் களரி ஏற்படு கின்றது. முஸ்லிம் கிராமங்களின் அயலில் இருந்த தமிழ் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக இடம் பெயருகின்றனர். இதன் எதிரொலி யாக, வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் 24 மணி நேரத்துக்குள் தமது ஒரு உடைமையையும் எடுத்துக் கொண்டு போகாமல் வெளியேறவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கட்டளையிடுகின்றனர். 60,000 முஸ்லிம் மக்கள் வெளியேறி புத்தளம், குருநாகல் போன்ற மாவட்டங்களில் தஞ்சம் கோருகின்றனர்.

# உங்கள் கவனத்திற்கு........

நீங்கள் கீழே தரப்பட்ட படிவத்தை நிரப்பி எங்களுக்கு அனுப்பி வைப்பதனால் இந்தச் சிறு பதிப்பின் பயனை நாம் அறிந்து கொள்ள உதவுகின்றீர்கள். தயவுசெய்து உதவுவீர்களா? நன்றி.

1. இந்தப் பதிப்பினை வாசித்ததனால் நான் அறிந்து கொண்ட முக்கியமான புதிய தகவல்கள்:

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

2. ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருத்தமான பதில்களை அடையாளம் செய்க:

நான் இந்த நூலிலுள்ள தகவல்களை.

- ☐ எனது குடும்பத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வேன்
- ☐ எனது நண்பர்கள். சக பணியாளர்கள் ஆகியோருடன் பகிர்ந்து கொள்ளுவேன்.
- ☐ சிறிய வாசகர் வட்டமொன்றை அமைத்து இதைப் பற்றிய மேலதிகமான புத்தகங்களைப் படித்து அதிலுள்ளவர்களுடன் கலந்துரையாடி இந்த விடயத்தை இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ள முயற்சி செய்வேன்.

❏ எனது ஊரில் சிறு கூட்டங்களை ஏற்பாடு செய்து பரந்த மட்ட மக்களுக்கு இனப்பிரச்சினையின் வரலாறு பற்றி விளக்குவேன்

3. இனப்பிரச்சினையைப் பற்றி மேலதிக விளக்கம் எனக்குத் தேவை. பின்குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பற்றிய தகவல்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களா?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4. வேறு ஏதாவது கருத்துக்கள் இருப்பின்

..........................................................................................

..........................................................................................

பெயர் ..........................................................................

தொழில் ..........................................................................

வயது ..........................................................................

முகவரி ..........................................................................

..........................................................................

..........................................................................

நிரப்பிய படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி

விழுது
3, டொறிங்டன் அவெனியூ
கொழும்பு 7

## விழுது பற்றி.....

ஒரு விருட்சம் கிளை பரப்பி திக்கெட்டும் அகன்று வளர.எவ்வாறு அதன் விழுதுகள் ஆதரிக்கின்றனவோ, அவ்வாறே மக்களின் வலையமைப்புக்கள் கிளை விட்டுப் பலம் பெற்றுப் பரவுவதற்கான ஆதரவை நல்க விழுது என்னும் நிறுவனம் உருவானது.

## எங்கள் தொலைநோக்கு....

மக்கள் நெறிப்படுத்தி கண்காணித்துப் பங்குகொள்ளும் ஜனநாயகம் உள்ள சமூகம்.

## எங்கள் பணி நோக்கு...

மனித ஆற்றல்களை வளப்படுத்துவதற்கூடாக, அரச தனியார் மற்றும் அரசு சாரா நிறுவகங்களுக்குள் ஜனநாயகப் பண்பாட்டை வளர்த்து, மனிதர்களின் பங்கேற்புக்கான பொறிமுறைகளை தாபிக்க உதவுதல்.

## எங்கள் அணுகுமுறை....

- மக்கள் நிறுவனங்களையும் துறை சார்ந்த அமைப்புக்களையும் நிறுவுதலும், ஊக்குவித்தலும்
- அபிவிருத்தி சார்ந்த பயிற்சியும், களத்திலான திட்டச் செயற்பாட்டு உதவியும் வழங்கல்
- தொடர்புகளை உருவாக்கி கருத்துக்களினால் போஷித்து நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் வலையமைப்புக்களுக்கு அனுசரணையாயிருத்தல்
- சமத்துவமும் சமானத்துவமும் கொண்டுவரும் கொள்கைச் சட்ட மாற்றங்களுக்காக எடுத்துரைத்தல்
- ஆய்வகள் மற்றும் வெளியீடுகள் மூலம் அறிவு உருவாகத்தி லும் அதன் பரப்புதலிலும் ஈடுபடல்.
- வறுமையினாலும் கல்வியின்மையினாலும் தாழ்த்தப் பட்டு இருக்கும் சமூகத்தினருக்கு எழுத்தறிவு, அரங்கச் செயற்பாடு, மற்றும் கலை நடவடிக்கைகளுக்கூடாக அவர்களின் பிரச்சினைகளுக்கான குரல் கொடுத்தல்.

## எங்கள் உபாய மார்க்கங்கள்.....

கல்விச் சமூகத்தின் விழிப்பு

சிவில் சமூகத்தின் இயக்கம்

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும்

அரசியல் அமைப்புக்களின் ஜனநாயகக்

கட்டமைப்புக்களில் வளர்ச்சி

பால்நிலை அபிவிருத்தி

அரங்கக் கலையின் மலர்ச்சி

தனியார் துறையினரின் விருத்தி